காவிரி

T14624
R005D05
T.14624

தென்னாட்டுச் செல்வங்கள் : 1

காவிரி

ஆசிரியர்கள் :
வித்துவான் எம். எஸ். வேங்கடாச்சாரியார்
வித்துவான் கோ. வில்வபதி
டி. ஆர். ஸ்ரீநிவாஸாசாரியார் பி.ஏ., பி.டி. (தமிழ்)
இந்து தியலாஜிகல் உயர்நிலைப்பள்ளி, சென்னை

வர்தா பதிப்புக் கழகம்
திருவல்லிக்கேணி :: சென்னை

முதற் பதிப்பு—1951

All Rights Reserved

Kabeer Printing Works, Madras-5

அறிஞர்கள் சிந்தனைக்கு !

அறிவுடையீர் !

தமிழ் நாட்டை அணிசெய்யும் ஆறுகளில் காவிரி தலை சிறந்து விளங்குகிறது. காவிரியின் போக்கில் என்றும் அழியாத இயற்கை நலம் வாய்ந்த இடங்கள் பல உள்ளன. அவ்விடங்கள் பல நூறுயிரம் ஆண்டுகள் வரை தென்னுட்டின் பொருளாதார வளர்ச்சிக்குக் கருவூலங்களாய்த் திகழும் பேராற்றல் வாய்ந்தவை. அவற்றை அறிந்து நன்கு பயன்படுத்துதல், நம் நாட்டு அறிவுநூல்புலவர்கள், தொழிற்கலை வல்லுநர், பொருளாதார நிபுணர் ஆகியோர் தம் முதற்கடமை யாகும். இத்தகைய பெருவளம் செறிந்த அன்னை காவிரியின் பெருமைகளில் மாணவர்க்குத் தேவையான சிலவே ஈண்டு எடுத்துக் கூறப்பெற்றுள்ளன. இடை இடையே காவிரியின் போக்கில் திகழும் சிறந்த இடங்களின் படங்களும் இணைக்கப்பெற்றுள்ளன. காவிரி உற்பத்தியாகும் குடகு நாட்டிலிருந்து அது கடலோடு கலக்கும் காவிரிப்பூம்பட்டினம் வரை அதன் போக்கை விளக்கும் வரலாறும், தரைப்படமும், சோழ நாட்டில் காவிரி உழவுத் தொழில் வளத்துக்கு உதவும் வகையை விளக்கும் படமும் காவிரியின் அளவற்ற பெருமைகளையும் அதன் மூலம் விளையும் பயன்களையும் சிந்திக்கப் பெரிதும் துணைபுரிவனவாம்.

இந்நூல் மாணவர்தம் உற்சாகம் குன்றுதவகையில் அவர்கள் விரும்பிப் படிக்கும் செய்திகளையே திரட்டிக் கூறுகின்றது. ஆகையால் இஃது அவர்தம் உள்ளக் கிளர்ச்சிக்கு உறுதுணை புரிந்து அவரை நம் நாட்டுக்கு இன்றியமையாத ஆக்கவேலைகளில் ஈடுபடுமாறு தூண்டும் எனக் கருதுகிறோம்.

இந்நூல் எல்லாவகையிலும் சிறந்து விளங்குமாறு தம் அறிவு நலம் சான்ற கருத்துக்களைக் கூறி எங்களை ஊக்கிய சென்னைத் தமிழாசிரியர் கழகத் தலைவர் முதுபெரும் புலவர் மயிலை சிவமுத்து அவர்கட்கும், எங்கட்கு வேண்டிய பல நூல்களையும் திரட்டித் தந்தும் தக்க ஆலோசனை கூறியும் உதவிய நண்பர் மணி, கோபாலகிருஷ்ணன் அவர்கட்கும் எங்கள் நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

'மூவர்'

பொருளடக்கம்

			பக்கம்
1.	தோற்றுவாய்	...	1
2.	தெய்வக் காவிரி	...	6
3.	காவிரியும் இலக்கியமும்	...	10
4.	காவிரியின் தோற்றமும் போக்கும்	...	16
5.	நகரங்கள்	...	42
6.	நாகரிகம்	...	56
7.	அணைகள்	...	66
8.	நீர்த்தேக்கங்கள்	...	76
9.	மின்சார உற்பத்தி	...	85
10.	பொருளாதாரம்	...	92
11.	நம் கடமை	...	98



சிவசமுத்திரம் : நீர்வீழ்ச்சியின் தோற்றம்

1. தோற்றுவாய்

உலகம் உயிர்வாழ இன்றியமையாத எல்லாவித வளங்களையும் பெற்று விளங்குவதற்கு நீரே முதன்மையான காரணமாம். அங்ஙனம் சிறந்த நீர்ப்பெருக்குக்குக் காரணமான மழையைத் தெய்வமாகப் போற்றும் பண்பும் பண்டைத் தமிழரிடம் தலைசிறந்து விளங்கியது. அதனாலேயே திருக்குறளில் கடவுள் வாழ்த்துக்குப்பின் அக் கடவுளின் கருணைப் பெருக்காய் விளங்கும் மழையை வள்ளுவர் போற்றிக் கூறுகிறார். விண்ணிலிருந்து தண்ணிய நீரைச் சுரந்து உலகைக் காத்தலால் 'மாமழை போற்றுதும், மாமழை போற்றுதும்' என்று நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் பாடிய சேரநாட்டு இளவரசரும் மழையின் மாண்பைப் போற்றி வணங்குகிறார்.

ஆறுகளும் நகரங்களும்

ஒரு நாடு உணவு, உடை, ஏனைய பொருள்கள், கல்வி, வாணிகம், தொழில் வளம் ஆகிய நாகரிக வசதிகள் யாவும் பெற்று விளங்குவதற்கு அந்நாட்டின்

இயற்கை அமைப்புக்களே இன்றியமையாக் காரணங் களாம். அவற்றிலும் சிறப்பாகக் கடல், ஆறு, ஏரி, குளம் போன்ற நீர்நிலைகளே பெருங் காரணங்க ளாகும். உலகில் தோன்றி வளர்ந்துள்ள பல்வேறு நாகரிகங்களும் ஆற்றங்கரைகளிலேயே தோன்றின. மக்கள், நாகரிகம் என்பதையே அறியாமல் வாழ்ந்த மிகப் பழைய காலத்தில் ஒருவரை ஒருவர் அறிந்து கொள்ள வாய்ப்பு இல்லாமல் விலங்குகளைப்போல் காடு களில் திரிந்தனர்; கண்டதை உண்டு இரவில் மரங் களில் துயின்று காலங் கழித்தனர். அவ்விதம் வாழ்ந்த அவர்கள் உணவுக்காகப் பல இடங்கட்கும் சென்ற போது வளம் மிக்க ஆற்றங் கரைகளைக் கண்டனர்; அங்கு அவர்கட்கு வேண்டிய உணவுப் பொருள்கள் எளிதிற் கிடைத்தமையால் அங்கேயே தங்கினர்; நாளடைவில் மக்கள்தொகை மிகுதியாகவே, உணவுப் பொருள்களைத் தாங்களே விளைவிக்கத் தொடங்கினர். இங்ஙனம் உழவுத் தொழில் தோன்றியது. உழவின் மூலம் பிற தொழில்கள் தோன்றின; நாகரிகம் வளர்ந்தது. தேவைக்கு மிகுதியான பொருள்களைப் பிறருக்குக் கொடுத்துத் தங்கட்கு வேண்டிய பொருள் களை அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளும் பண்ட மாற்றுமுறை ஏற்பட்டது. அதனால் வாணிகம் வளர்ந்தது. இங்ஙனம் மக்கள் நெருங்கிப் பழகவே, ஒருவர் கருத்தை ஒருவருக்கு அறிவிக்க மொழி தோன்றியது. மொழியே ஒரு நாட்டின் நாகரிகத் திற்கு ஆணிவேர். அதன் மூலம் பற்பல கலைகளும் தோன்றி வளர்ந்தன. இவ்வாறே நாகரிகம் வளர்ச்சி அடைந்தது என்று அறிஞர் கூறுகின்றனர். ஆதி யில் சிற்றூர்களாக இருந்தவை மக்கள் தொகை பெருகப் பேரூர்களாகவும், பேரூர்கள் நகரங்களாகவும்,

நகரங்கள் நாடுகளாகவும் மாறிச் செழித்து நாகரிகத்தின் ஊற்றிடங்களாய் அமைந்தன. ஆகவே, உலகத் தோற்றத்திற்கு—நாகரிக வளர்ச்சிக்கு—ஆறுகளே காரணமாம் என்பது நன்கு விளங்கும்.

நதிக்கரையில் அமைந்த நகரங்கள்

உலகில் பழைய நாகரிகம் வளர்ந்த இடமாகக் கருதப்படும் எகிப்து நாட்டின் தலைநகரமாக விளங்கும் கெய்ரோ, நைல்நதியின் கரையில் நனி சிறந்து விளங்குகிறது. பாபிலோனியாவின் பழமையான தலைநகரமாகிய பாக்தாதும் டைகிரீஸ் ஆற்றின் கரையிலேயே திகழ்கிறது. புகழ்பெற்ற உரோம் நாட்டின் தலைநகரமாகிய உரோமாபுரியும் டைபர் நதியின் கரையிலேயே அழகுடன் பொலிகிறது. அந்நதிகளின் நன்கொடையினுலேயே வளமும் நாகரிகமும் பெற்ற வளநாடுகளாக அவை விளங்குகின்றன. இந் நாகரிகங்களுக்கெல்லாம் பழமையானதாகிய திராவிட நாகரிகமும் கடல் கொண்ட பஃறுளி, குமரி ஆற்றங் கரைகளிலும், காவிரிக் கரையிலும் தோன்றி வளர்ந்ததேயாகும். இப்போது இந்தியாவில் சிறந்து விளங்கும் பாட்னு, காசி, கல்கத்தா போன்ற நகரங்கள் கங்கைக் கரையிலும், டில்லி, ஆக்ரா போன்ற நகரங்கள் யமுனைக் கரையிலும், மைசூர், சீரங்கப்பட்டணம், உறையூர், திரிசிராப்பள்ளி, கும்பகோணம், மாயூரம் போன்ற நகரங்கள் காவிரிக் கரையிலும், மதுரை, திருநெல்வேலி போன்ற நகரங்கள் வையை, தாமிரவருணி ஆற்றங் கரைகளிலும் விளங்குவதும் இவ்வுண்மையை அறிவுறுத்தும்.

செயற்கை நகரங்கள்

இயற்கையில் இங்ஙனம் ஏற்பட்ட நகரங்கள் தவிரச் செயற்கையில் அமைக்கப்பட்ட நகரங்களும் ஆற்றங்கரைகளிலேயே ஏற்படுத்தப்பட்டன. உழவு முதலிய பற்பல தொழில்கள் வளரவும், படகுப் போக்கு வரவு வசதி உள்ளமையால் வாணிகம் செழிக்கவும் பகைவர்கள் எதிர்த்தால் அரணாக இருந்து காக்கவும் ஆறுகள் உதவுவதனாலேயே பெரிய பெரிய தலைநகரங்கள் ஆற்றங்கரைகளில் அமைக்கப்பட்டன. அரசியல் வல்ல அறிஞராகிய வள்ளுவப் பெருந்தகையாரும் ஆற்றினை நாட்டிற்கு இன்றியமையாத உறுப்புக்களில் ஒன்றாகக் கூறியுள்ளார். ஆறு ஒரு நாட்டின் இயற்கை அழகிற்குக் காரணமாகவும் உள்ளது. 'ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்' என்று ஔவைப் பிராட்டியார் அருளியுள்ளாரன்றோ?

தமிழர்கள் ஆற்றினைப் போற்றிய முறை

தமிழ்மக்கள் ஆற்றின் சிறப்பை நன்கு அறிந்து போற்றியுள்ளார்கள் என்பதும் நாம் அறியத்தக்கது. அவர்கள் ஆற்றை அன்னையாகவும் தெய்வமாகவும் கருதி வழிபட்டுவந்துள்ளனர். அதனாலேயே ஒவ்வோர் ஆற்றைப்பற்றியும் தெய்வத்தன்மை உடைய கதைகள் பலவும் வழங்குகின்றன. ஒரு சிறந்த காவியத்தைப் பாடும் பெரும்புலவர்களும் காவியத் தலைவனின் நாட்டையும் அந்நாட்டை வளப்படுத்தும் ஆற்றின்பெருமையையும் பாராட்டிப் பாடுவதை வழக்கமாகக் கொண்டனர். தமிழ்ப்புலவர் பலர் ஆற்றைக்கொண்டே பல உண்மைகளை மக்கட்கு விளக்கிக் கூறியுள்ளனர்.

காவிரியின் சிறப்பு

இங்ஙனம் பலவகையிலும் சிறந்து மக்கள் வாழ்க்கைக்கு இன்றியமையாதனவாக விளங்கும் ஆறுகளில், நம் தமிழ் நாட்டில் பாய்ந்து தம் நீர் வளத்தால் கலைகளையும் நாகரிகத்தையும் கவினுற வளர்ப்பன காவிரி, வைகை, தாமிரவருணி, பெண்ணை, பாலாறு என்பனவாம். அவற்றிலும் மிகச் சிறந்ததாய்த் தமிழ்நாட்டின் வளத்திற்கு உயிராய்—வற்றாத ஜீவநதியாய்—பேராறாய் விளங்கு வது காவிரியேயாம். நம் தேசிய கவிஞர் பாரதியார் அவர்களும்,

> " காவிரி தென்பெண்ணை பாலாறு—தமிழ்
> கண்டதோர் வையை பொருநைநதி—என
> மேவிய யாறு பலவோடத்—திரு
> மேனி செழித்த தமிழ்நாடு "

என்று தமிழ்நாட்டின் வளத்திற்குக் காரணமாக விளங்கும் ஆறுகளில் காவிரியையே முதலில் வைத் துக் கூறியிருப்பது அறியத்தக்கது.

இத்தகைய வளம் மிக்க காவிரிப் பேரியாற்றின் தோற்றம், வரலாறு, பயன், அது வளர்த்த நாகரிகம் ஆகியவற்றை அறிந்துகொள்வது, மேலும் அப் பேராற்றை நாம் எவ்வகையில் பயன்படுத்தித் தமிழ் நாட்டின் வாழ்வை வளப்படுத்தலாம் என்னும் சிந்தனைக்கு ஒரு தூண்டுகோலாய் அமையும். இந் நோக்கத்தை உளங்கொண்டு காவிரிப் பேரியாற்றின் வரலாற்றை விளக்கமாக அறிவோம்.

2. தெய்வக் காவிரி

காவிரியைத் தமிழ் நாட்டு மக்கள் பண்டு தொட்டுத் தெய்வத் திருநதியாகப் போற்றிவருகின்றனர். அதன் பெருமைகள் எண்ணற்றன. அத் திருநதியின் சீரையும் சிறப்பையும் ஆராய்ந்து அறியுமுன் அதன் திருப்பெயர்களின் மாண்புகளேயும், அவை வழங்கியமைக்குக் காரணங்களேயும் ஆராய்வோம்.

அகத்தியர் தவம்

காவிரி என்னும் பெயர் அமைந்தமைக்குக் காரணம் கந்த புராணத்திலுள்ள வரலாற்ருல் மிகவும் தெற்றென விளங்குகிறது. முற்காலத்தில் விந்தமலே மகாமேருவுடன் போட்டியிட்டு மிக உயரமாக வளர்ந்து சூரியன் முதலான கோள்களுக்கு இடையூறு விளேத்துச் செருக்கி இருந்தது. அது கண்ட அமரர்கள் அகத்தியரை அணுகி விந்தமலேயின் இறுமாப்பை அடக்குமாறு பெரிதும் வேண்ட, அவரும் அதற்கிசைந்து அத்தகைய வன்மையைப் பெறுமாறு சிவபிராளே நோக்கித் தவம் புரிந்தார். இறைவனும் அங்ஙனமே அருளி அவரைத் தென் திசை சென்று பொதிய மலேயில் தவம் புரியுமாறு கூறினர் ; அவரது வழிபாட்டுக்குப் பேருதவியாகக் கயிலேயில் இருந்த காவிரியாம் புண்ணிய நீரைக் கமண்டலத்தில் எடுத்து ஏகுமாறும் பணித்தார். அகத்தியரும் பரமனேத் தொழுது விடைபெற்று, விந்தத்தின் செருக்கடக்கிச் செல்லும் வழியில் கொங்கு நாட்டில் தங்கி அருந்தவம் ஆற்றிவந்தார்.

இந்திரனது கா செழித்தமை

இஃதிங்ஙனமாக, இந்திரன் சூரபதுமனுக்கு அஞ்சிச் சீர்காழியில் தன் மனைவியுடன் மூங்கிலுருக் கொண்டு தங்கட்கு நேர்ந்த இடையூற்றை அகற்றுமாறு சிவபெருமானை நோக்கித் தவம் புரிந்து கொண்டிருந்தான். இறை வழிபாட்டிற்காக இந்திரன் அங்கு அமைத்திருந்த நந்தவனம், மழையின்மையால் வாடிக் கருகியது. இதனால் அமரர்கோன் உளம் பதைத்திருந்தனன். அவ்வமயம் அங்கு வந்த நாரத முனிவர், கொங்கு நாட்டில் தவம் புரியும் அகத்தியர் கமண்டலத்தில் காவிரி உறைவதாகவும், அது நிலவுலகில் பாயுமாறு செய்தால் நந்தவனம் செழிக்கு மெனவும், அச்செயல் விநாயகப்பெருமான் அருளால் கைகூடும் எனவும் கூறினர். இந்திரன் வேண்டுகோளுக்கிணங்கிய ஆனைமுகன் ஒரு காகத்தின் உருக்கொண்டு அகத்தியர் கமண்டலத்தின் மீது அமர்ந்தார். குறுமுனிவர் வலக்கரத்தால் காகத்தினைத் துரத்தவே கமண்டலம் கவிழ்ந்தது. சமயம் பார்த்திருந்த காவிரியும் தன்னை முனிவர் நிலவுலகில் பாயுமாறு பணித்ததாகக் கருதி ஆறுகப் பெருக்கெடுக்க, இந்திரன் காவும் செழித்தது. காகத்தால் கவிழ்க்கப் பெற்று ஆறுய்ப் பெருகினமையால் 'காகவிரி' என வழங்கிய பெயரே மருவிக் 'காவிரி' என வழங்குகிறது என்றும், இந்திரன் அமைத்த 'கா' (பூஞ்சோலை) செழிக்க விரிந்த (பாய்ந்த)மையின் 'காவிரி' என வழங்குகிறதென்றும் ஆன்றோர் கூறுவர்.

கவேர முனிவர்தம் நன்கொடை

காவிரியென்ற பெயரேயன்றி இவ்வாற்றிற்குக் ‘காவேரி’ என்றும் ஒரு பெயர் உண்டு. இதற்குக் காரணத்தை நாம் ஆக்னேய புராணம் என்னும் மிகப் பழமையான நூலில் பரக்கக் காண்கிறோம். பண்டைக் காலத்தில் ‘கவேரன்’ என்னும் மன்னர் இமயமலைச் சாரலில் அந்தமில் இன்பத்தழிவில் வீட்டைப் பெறுமாறு நான்முகனை நோக்கி அருந்தவம் கிடந்தார். பிரமன் அவர்க்குக் காட்சியளித்து, ‘என் மகள் விஷ்ணுமாயை என்பாள் திருமாலின் அம்சம் வாய்ந்தவள்; மிக்க தூயவள்; அண்டியவர் பாவங்களைக் கடிதில் அகற்றுபவள். அத்தகையாளை மகளாக நீ பெற்றால் வீடுபேறடைவாய்,’ என்று அருளினர். கவேர முனிவர் அதற்கிசையவே பிரமன் விஷ்ணுமாயையை அழைத்து, முனிவர்தம் மகளாகி அவர்தம் பாவங்களைப் போக்கி, அவரைப் பிறவா நெறியில் உய்க்குமாறு பணித்தார். விஷ்ணு மாயையும் அவ்வாறே தன் தெய்வத் தன்மையால் கவேர முனிவருக்கு நற்கதி நல்கினாள். அங்ஙனம் கவேர முனிவரின் மகளாகத் தோன்றிய விஷ்ணு மாயை திருமாலின் ஆணைப்படி புண்ணியத் திருநதி யாகப் பெருக்கெடுத்தனள். அதனால் அந்நதிக்குக் ‘காவேரி’ என்னும் பெயர் வழங்கலாயிற்று.

காவிரியின் தெய்வத் தன்மை

காவிரி நதி இத்தகைய சிறப்புக்கள் பெற்று விளங்கியமையாலேயே பண்டைக் காலம் முதல் தெய்வத்தன்மை வாய்ந்த நதியாகக் கருதப்பட்டுவரு கிறது. ‘தெய்வக் காவிரி’ என்று சிலப்பதிகார ஆசிரி யரும், ‘தெய்வத் திருநதி’ என்று கம்பரும் காவிரியின்

தெய்வத் தன்மையைப் போற்றியுள்ளனர். 'காவிரி நதியானது மலையில் தோன்றிப் பெருகி அளவற்ற அறங்களை வளர்க்கின்றது. அக்காரணத்தால் அஃது இமயமலையரசன் இனிய மகளாய்த் தோன்றி, காஞ்சியில் எண்ணுன்கு வகை அறங்களையும் இனிதின் ஆற்றிய காமாட்சியின் கருணைப் பெருக்குப் போன்று ஓடுகிறது,' என்று பெரிய புராண ஆசிரியர் உமாதேவியின் தெய்விகத் தன்மையோடு காவிரியின் தெய்விகத் தன்மையையும் ஒப்பிட்டுப் போற்றுகிருர். இங்ஙனம் தெய்வத் திருநதியாக விளங்கும் காரணத் தாலேயே தமிழ் மக்கள் காவிரியின் நீரைப் புனித நீராகப் போற்றித் தம் வல்வினை தீரப் புனலாடி வருகின்றனர்.

புண்ணிய நன்னீர்

காவிரி உற்பத்தியாகும் தலைக்காவிரியும், அது கடலோடு கலக்கும் காவிரிப்பூம்பட்டினத்துச் சங்க முகத் துறையும் பண்டு முதல் இன்றளவும் புண்ணியத் துறைகளாகக் கருதப்பட்டுவருகின்றன. 'தண்ணறுங் காவிரித் தாதுமலி பெருந்துறைப் புண்ணிய நன்னீர்' என்று இளங்கோவடிகள் காவிரிப்பூம்பட்டினத்துச் சங்க முகத்துறையைப் புண்ணிய தீர்த்தமாகப் போற்றியுள்ளார். ஐப்பசித் திங்களில் 'துலாமுழுக்கு' என்னும் புண்ணிய நீராட் டிற்காக நாட்டின் பல பாகங்களிலிருந்தும் மக்கள் இச்சங்கமுகத் துறைக்கு வருவது இன்றும் வழக்கமா யுள்ளது. நாவுக்கரசர், 'காவிரி நதி முழுவதும் புண்ணிய தீர்த்தமேயாம்,' என்ற கருத்தில் இதனைப் 'பொன்னித் தீர்த்தம்,' என்று புகழ்ந்துள்ளார். 'கங்கையிற் புனிதமாய காவிரி' என்று கம்பர் இதன்

புனிதத் தன்மையைப் போற்றுகிருர். காவிரி தன் புனிதத்தன்மையால், ‘தென்னுட்டுக் கங்கை,’ என்று இன்றும் மதிக்கப்பெற்றுவருகிறது. ஆடி மாதம் பதினெட்டாம் நாளன்று காவிரியில் இரு கரையும் நிரம்பப் புதுப்புனல் பெருகி ஓடும். மக்கள் அந் நாளை நன்னுளாகக் கருதிப் பற்பல மங்கலப் பொருள் களையும் காவிரித் தாய்க்குக் காணிக்கையாக வழங்கி வழிபாடுசெய்து மகிழ்கின்றனர். இங்ஙனம் பல ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகத் தெய்வத் திருநதி யாக—புனிதத் திருநதியாக—காவிரி போற்றப்பெற்று வருகின்றது.

3. காவிரியும் இலக்கியமும்

சோழர்தம் குலக்கொடி

காவிரியாறு பிறந்தது குடகு நாட்டில்; குதித்தும் தவழ்ந்தும் ஓடி விளையாடி மகிழ்ந்தது மைசூர் நாட்டிலும் கொங்கு நாட்டிலும்; தன் வளமெல்லாம் வழங்கி, மக்களை வாழ்வித்துக் குரைகடலில் குளிப்பது சோழ நாட்டில். தெய்வக் காவிரியாறு இத்துணை நாடுகள் வழியாகப் பாய்ந்து பல வளங்களையும் கொழித்துக்கொண்டு வருகிறது; எனினும் சோழ நாட்டுக்குள் புகும்போதுதான் எண்ணற்ற தன் அன்புக் கரங்களாம் கிளைநதிகளை உண்டாக்கி, எங்கு நோக்கினும் ஆறுகள், வாய்க்கால்கள், நீர்நிலைகள் என்று கூறுமாறு அந்நாட்டையே நீர்நாடாக்கி யுள்ளது. இக்காரணத்தாலேயே காவிரியாறு, பல நாடுகளின் வழியே பாய்ந்து வந்தாலும், சோழ நாட்டுக்கே தனி உரிமையுடையதாய்ப் புலவர் பலராலும் போற்றப்பட்டுவருகிறது. மணிமேகலை

ஆசிரியராகிய சீத்தலைச் சாத்தனூர், 'பாடல்சால் சிறப்பில் பரதத்து ஓங்கிய, கோடாச் செங்கோல் சோழர்தம் குலக்கொடி' என்றும், சிலப்பதிகார ஆசிரியர் இளங்கோவடிகள், 'சோழர்தம் தெய்வக் காவிரி' என்றும் இதனைச் சோழர்களுக்குரிய ஆறெனவே கூறியிருத்தல் அறியத் தக்கது.

காவிரியும் சோழநாட்டு மக்களும்

காவிரிக்கும் சோழநாட்டு மக்களுக்கும் உள்ள தொடர்பு தாய்க்கும் சேய்க்கும் உள்ள தொடர்பு போன்றதாம். காவிரியால் சோழநாட்டு மக்களுக்கே பயன் அதிகம். சோழ நாட்டில் பாயும்போது காவிரி தன்னிடமிருந்து தானே பல கிளைநதிகளை உண்டாக்கிக்கொண்டு பாய்கின்றது; தன் உரு மெலிந்து, வடிவிழந்து, பற்பல இடங்களிலும் பரவிச் சென்று பாடுபட்டுத் தன் அருமை மக்களை ஊட்டி வளர்க்கின்றது; வேளை அறிந்து தாய் அமுதூட்டி மக்களை மகிழ்விப்பதுபோலக் காவிரியும் பயிர் விளையும் காலம் அறிந்து, தன் வளம் சுரந்து காக்கின்றது! காவிரி இவ்விதம் சோழ நாட்டு மக்களைத் தாய்போல் காக்கும் காரணத்தால்தான் சிலப்பதிகார ஆசிரியர்,

> 'வாழி அவன்தன் வளநாடு மகவாய் வளர்க்கும் தாயாகி
> ஊழி உய்க்கும் பேருதவி ஒழியாய் வாழி காவேரி!'

என்று ஊழிக்காலம் வரை காவிரியாறு சோழ நாட்டிற்குத் தன் வற்றாத வளஞ்சுரக்கும் ஈகையினைக் கற்பவர் மனம் களிக்குமாறு அழகுற எடுத்து மொழிந்துள்ளார். இங்ஙனம் காவிரியாறு சோழநாட்டுக்கு உரிய ஆறாக விளங்குகின்ற காரணத்தால் காவிரியின் பெருமை சோழ நாட்டின் பெருமையோடும், சோழ மன்னர்களின் பெருமையோடும் இரண்டறக்கலந்து

திகழ்கிறது. சோழ நாட்டையும், சோழ மன்னரையும் பாராட்டும் புலவர்கள் ' **காவிரி நாடு** ' என்றும், ' **காவிரி நாடன்** ' என்றும் புகழ்ந்து கூறியுள்ளமை இதனை வலியுறுத்தும்.

வற்கடத்தும் வளம் குன்றாமை

பொருநராற்றுப் படை என்ற நூலில் காவிரியின் வற்றாத வளம் பின்வருமாறு பாராட்டப்படுகிறது: ' கோடை வெம்மையால் மரம், செடி, கொடிகள் யாவும் கருகினாலும், மேகம் கடலில் நீரை முகக்க மறந்தாலும், மழைவளம் சுருங்கிப் பெரிய பஞ்சமே ஏற்பட்டாலும் காவிரி தன் வளம் சுரத்தலில் தவறாது. அவ்வாறு காவிரி வளம் சுரத்தலால் சோழநாட்டில் வயல் வளம் சிறந்து திகழ்கிறது. உழவர்கள் பயிர் விளைவேற்றி, அறுவடை செய்து, நெல்லை மலையெனக் குவிக்கின்றனர். அவர்களுடைய வீடுகளில் உள்ள நெற்குதிர்களில் எல்லாம் இடமே இல்லாதபடி நெல் நிரம்பிக்கிடக்கிறது. இங்ஙனம் சோழ நாட்டில் காவிரித் தாயின் கருணையால் ஒரு வேலி ஆயிரம் கலமாக விளைகிறது. அத்தகைய வளம் மிகுந்த காவிரி சூழ் நாடு, ' என்று காவிரியின் செல்வச் சிறப்பை உள்ளது உள்ளவாறே சித்திரித்துக் காட்டுகிறது அந்நூல்.

மணிமேகலை ஆசிரியர் சாத்தனாரும், மேகங்கள் நிலைமாறியமையால் மழை பொழியாது கோடை காலம் மக்களை மிகுதியாக வருத்தும்போதும் காவிரி தன் நிலை மாறாமல் பெருக்கெடுத்து ஓடி வளங் கொழிக்கும் வள்ளன்மையை,

' கோள்நிலை திரிந்து கோடை நீடினும்
தான்நிலை திரியாத் தண்டமிழ்ப் பாவை '

என்று புகழ்ந்துள்ளார். அவர் காவிரியைத் ' தண்

டமிழ்ப் பாவை', என்று குறித்தமை நினைவில் கொள்ளத்தக்கது. தமிழ் நாட்டின் வளத்துக்கு—பெருமைக்கு, நாகரிகத்துக்குக்—காரணமாக இருத்தலினுலேயே அவர் காவிரியை அப்பெயரால் குறித்தனர். காவிரியாறு சோழ நாட்டில் பாய்ந்து வளஞ் செய்தாலும் அவ்வளம் தமிழ்நாடு முழுவதற்கும் சொந்தமானது என்பதும் அதனுல் விளங்குகின்றதன்ருே ?

சிலப்பதிகாரச் சித்திரம்

இனி, காவிரித்தாய் அளிக்கும் வளங்களைக் காண்போம்: 'காவிரியில் புதுப்புனல் பெருக்கெடுத்து ஓடுவதால் உழவர்கள் ஆரவாரத்துடன் பற்பல தொழில்களில் ஈடுபடுகின்றனர். மதகுகளின் வழியே நீர் சலசல எனப் பண்ணிசைத்துப் பாய்ந்தோடுகிறது. நீர்ப் பெருக்கைத் தாங்காமல் கரைகள் உடைந்தமையால் காவிரிநீர் பேரிரைச்சலோடு பெருகியோடுகிறது ஒரு புறம். ஆடவரும் மகளிரும் புதுப்புனலாடிப் பொங்கும் இன்ப வெள்ளத்தில் மூழ்கி ஆரவாரிக்கின்றனர் மற்ருெரு புறம். இங்ஙனம் பல்வேறுபட்ட ஒலிகளும் ஒருங்கு கலந்தார்ப்பக் காவிரித் தாய் கைவீசி நடந்து வருகிருள்,' என்று காவிரி தரும் வளத்தைச் சித்திரித்துக் காட்டுகிருர் இளங்கோவடிகள்.

"உழவர் ஓதை ; மதகு ஓதை ;
உடைநீர் ஓதை ; தண்பதங்கொள்
விழவர் ஓதை சிறந்தார்ப்ப
நடந்தாய் வாழி காவேரி"

என்பது அவர் காட்டும் அழகிய ஓவியமாம்.

காவிரி நாட்டின் நெல் வளம்

கவிச் சக்கரவர்த்தியாகிய கம்பர், 'காவிரி நாடு செந்நெல், கரும்பு, கமுகு முதலியன விளைந்து கடத்தற்கரிய வழியினை உடையதாக விளங்குகிறது,' என்று கூறும் முகத்தால் அவற்றிற்குக் காரணமான காவிரியின் சிறப்பைக் குறிப்பாகப் பாராட்டுகிறார். 'காய்த்த செந்நெலின் காடுசூழ் காவிரிநாடு,' எனப் போற்றுகிறார் சேக்கிழார். 'காவேரியால் விளை சோழ மண்டலம்,' என்று சிறப்பிக்கிறார் அருண கிரியார். மற்றும், 'சோழ வளநாடு சோறுடைத்து' என்று ஔவையார் கூறிய அழகிய வாக்கும், 'சோற்றால் மடை யடைக்கும் சோணாடு' என்னும் தொடரும் சோழ நாட்டின் சோற்றுப் பெருமையை விளக்குகின்றன. சோற்றுப் பெருமையை மட்டுமா விளக்குகின்றன? அச்சோற்றுக்குக் காரணமான காவிரியின் கருணைப் பெருக்கினையன்றோ விளக்கு கின்றன அத்தொடர்கள்!

பொன் கொழிக்கும் பொன்னி

காவிரி அளிக்கும் இத்தகைய வளத்தினைப் பாராட்டி இதற்குப் 'பொன்னி' என்ற பொருட் சிறப்பினையுடைய அழகிய பெயரைச் சூட்டி மகிழ்ந் தனர் நம் பண்டைச் சான்றோர். காவிரியின் நீரில் பொன் அணுக்கள் கலந்திருப்பதால் அப்பெயர் வழங்கியது என்றும், காவிரி நீர் பொன்னைக் கொழிப் பதால் அப்பெயர் பெற்றதென்றும் அறிஞர் கூறு கின்றனர். காவிரி பொன்னைக் கொழிக்கின்றதோ இல்லையோ, அதன் நீர் வளத்தால் அது தோன்றும் இடத்திலிருந்து கடலுடன் கலக்கும் இடம் வரை யிலும், சிறப்பாகச் சோழ நாட்டிலும் செல்வம்

கொழிப்பது உண்மையே யன்றோ! செல்வத்தைப் பொன்னென்பது மரபு. அவ்வாறு பொன்னைக் கொழிக்கும் காரணத்தால் காவிரிக்குப் 'பொன்னி' எனப் பெயர் அமைந்தது என்பதும் சாலப் பொருத்த மானது அன்றோ?

தண்ணீரும் காவிரியே!

இங்ஙனம் வளஞ்செய்யும் காரணத்தால் 'ஆறு' என்ற பெயர் காவிரியையே குறிக்கும் சிறப்புப் பெயராக அமைந்தது. அது மட்டுமா! அக்காவிரி பாய்ந்து செல்வம் செழிக்கும் சோழ நாடுதான் 'நாடு' என்னும் சிறப்பைப் பெற்றது. அத்தகைய காவிரி நாட்டை ஆள்கின்ற அரசனுகிய சோழன் தான் 'வேந்தன்' என்ற சிறப்பைப் பெற்ருன்.

> 'தண்ணீரும் காவிரியே; தார்வேந்தன் சோழனே;
> மண்ணுவதும் சோழ மண்டலமே'

என்ற தனிப்பாடல் செய்யுள் இக்கருத்தை நன்கு விளக்குகிறது.

வாழச்செய்யும் காவிரி வாழ்த்தவும் பயன்படுதல்

காவிரியின் இத்தகைய வளத்தையும் பெருமை யையும் நினைவிற் கொண்டே பண்டைக்காலத்தில் வாழ்ந்த புலவர் பெருமக்களும் பெரியோர்களும் அரசர்களையும் மக்களையும் வாழ்த்தும்போது, 'காவிரி மணலினும் பலவாக வாழிய' என்றும், 'கல்லும் காவிரியும் உள்ளவரையிலும் வாழிய' என்றும் வாழ்த்துவதை மரபாகக் கொண்டிருந்தனர். சோழன் மாவளத்தான் என்ற அரசனைத் தாமப்பல் கண்ணனர் என்ற புலவர், 'காவிரியின் எக்கரிட்ட மணலினும்

சிறக்க நின் ஆயுள்', என்று வாழ்த்தியுள்ளார். இங்ஙனமாகக் காவிரியின் நீர் சோழரை வளவராக்கவும், சோழ நாட்டை வளநாடாக்கவும் பயன்பட்ட தோடமையாது, அதன் மணல் அவரையும் அவர் நாட்டு மக்களையும் வாழ்த்தவும் பயன்பட்டது என்றால், காவிரியின் பெருமையை என்னென்று எடுத்தியம்புவது !

4. காவிரியின் தோற்றமும் போக்கும்

காவிரியின் பெருமைகளை அறிந்து மகிழ்ந்தோம். இனி, காவிரியின் தோற்றத்தையும், அது பல நாடுகளின் வழியாய்ப் பாய்ந்து வளஞ்செய்து கடலுடன் கலக்கும் மாண்பினையும் நிலநூல் முறையில் அறிவோம்.

1. தலைக் காவிரி

புலவர் பாடும் புகழுடையதாய்ப் பொலியும் பெருமை சான்ற காவிரிப் பேரியாறு தோன்றுவது குடகு நாட்டில் மேற்குத் தொடர்ச்சி மலையிலாகும். மேற்குத் தொடர்ச்சி மலையில் சையமலை என்னும் குன்று ஒன்று உள்ளது. அது 'பிரம்மகிரி' என்றும், 'பிரம்ம கபாலம்' என்றும் வழங்கப்படும். இம்மலைச் சிகரத்தினின்றுதான் காவிரிநதி தோன்றுகிறது. தமிழ்நாட்டு மக்களின் தாயாக விளங்கும் காவிரி அன்னையைத் தோற்றுவிப்பதன்மூலம் தமிழ் நாட்டின் வளப்பத்திற் கெல்லாம் காரணமாக உள்ள அக் குன்றினை நாம் வாழ்த்தக் கடமைப்பட்டுள்ளோம். காவிரி மாநதி தோன்றியதிலிருந்து இன்றளவும்



காவிரியாற்றின் தோற்றத்தையும் போக்கையும் விளக்கும் படம்

பிரம்மகிரியில் அந்நீரூற்று தடைப்படாமல் சுரந்து கொண்டே இருக்கிறது; இனி என்றும் சுரந்து கொண்டே இருக்கும். இத்தகைய இடைவிடாச் சுரப்பே காவிரிக்கு "ஜீவநதி" என்னும் உலகப் பெரும் புகழை விளைவித்துள்ளது.

தலைக்காவிரியின் அமைப்பு

இங்ஙனம் தமிழ்நாட்டின் 'மூச்சுக்கு மூலாதார மாய்' உள்ள காவிரியின் தோற்றுவாயில் குடகு நாட்டு மக்கள் முப்பது அடி சதுரமான குளம் ஒன்று அமைத்துள்ளனர். அக்குளத்தில் எப்பொழுதும் இரண்டரை அடி ஆழமே நீர் நிறைந்திருக்கும். எஞ்சிய நீரெல்லாம் வெளியே சென்றுவிடுமாறு மடை அமைக்கப்பட்டுள்ளது. இதற்குத் 'தலைக் காவிரி' என்பது பெயர். இக் குளத்திற்கு மேல் கரையில் ஒரு சிறிய கோயில் அமைந்துள்ளது. மக்கள் காவிரித் தாயின் கருணை நிரம்பிய உருவினை அக்கோயிலில் அமைத்து வழிபடுகின்றனர். அக் கோயிலில் என்றும் அணையாமல் ஒரு விளக்கு எரிந்துகொண்டே இருக்கிறது. அங்கே சுரக்கும் காவிரி அன்னையின் கருணை வெள்ளம் என்றும் வற்றாமல் சுரந்துகொண்டே இருக்கும் என்பதற்கு அறிகுறியாக அவ்வணையா விளக்கு எரிகின்றது போலும்!

காவிரியும் குடகுநாட்டு மக்களும்

காவிரி உற்பத்தியாகும் இந்த இடமும் தெய்வத் தன்மை பொருந்திய ஒரு புண்ணிய தீர்த்தமாகவே கருதப்பட்டுவருகிறது. குடகு நாட்டு மக்கள் யாவரும் இப்புண்ணிய தீர்த்தத்தில் நீராடிப் பேறு



தலைக் காவிரி : கோயிலும் குளமும்

பெறுகின்றனர். காவிரியின் கருணை அமிழ்தைப் பருக விரும்புகின்ற பெரியோர்கள் பலரும் இந்தியா வின் பல பாகங்களிலிருந்து வந்து தலைக்காவிரியில் மூழ்கிக் களிப்பெய்துகின்றனர். சிறப்பாகத் துலா மாதம் எனப்படும் ஐப்பசித் திங்களின் ஆரம்பத்தில் குடகு நாட்டு மக்கள் எல்லோரும் இங்கு ஒருங்கு கூடி விழாக் கொண்டாடுகின்றனர்; காதோலை, கருமணி முதலிய மங்கலப் பொருள்களை நீரிலிட்டு வாழ்த்திப் புது மணப்பெண்ணை வழி அனுப்பி வைப்பது போல் காவிரியை அனுப்புகின்றனர்.

பாகமண்டலத்தில் காவிரி

இத்தகைய சிறப்புடன் தலைக்காவிரியிலிருந்து புறப்படும் காவிரி பற்பல காடுகளைக் கடந்து மலை களின் வழியே பாய்ந்து '**பாகமண்டலம்**' என்னும் இடத்தினை அடைகிறது. பாகமண்டலத்தில் **கனகா** என்னும் சிற்றாறு காவிரியுடன் கலக்கிறது. சைய மலையின் உச்சியிலிருந்து வழியும் நீர்ப்பெருக்கு முழுவதும் அவ்விடத்தில் ஒருங்கு திரண்டு ஆறாக உருவெடுத்து அழகு வழியும் நங்கை எனக் கூறுமாறு புறப்படுகிறது. காவிரி அங்கிருந்துதான் 'ஆறு' என்னும் உருவத்தினை அடைகிறது.

இயற்கை எழில்

குடகு நாடு மலைநிலமாதலால் அம்மலைகளினூடு காவிரியாறு பலவாறு வளைந்தும் நெளிந்தும் ஓடும் காட்சி கண்களைக் கவரும் எழில் மிக்கதாம். இரு மருங்கிலும் உயர்ந்த பாறைகளும், பச்சைப் பசே லெனக் காட்சியளிக்கும் மரங்களும் செடி கொடி களும் அடர்ந்த இடங்களின் வழியாய்க் காவிரியாறு

பெருக்கெடுத்தோடுகிறது. ஆதலின் அப்பகுதிகள் இயற்கை யன்னை கொலு வீற்றிருக்கும் இடங்களோ எனக் கூறுமாறு திகழ்கின்றன. பாகமண்டலத்தி லிருந்து கிழக்கு நோக்கிப் பாய்ந்து காவிரியாறு **சித்திரபுரம்** என்னும் இடத்தை அடைகிறது; அங்கிருந்து வலப்புறம் திரும்பிச் சிறிது தூரம் ஓடிப் **பிரேஸர்பேட்டை** என்னும் ஊரினருகில் மைசூர் நாட்டின் எல்லையை அடைகிறது. பிறகு அது **கண்ணேகால்** என்ற ஊர் வரையில் ஏறக்குறைய இருபது மைல் மைசூர் நாட்டுக்கும் குடகு நாட்டுக் கும் எல்லையாக அமைந்து அழகு செய்கிறது.

2. மைசூர் நாட்டில் காவிரி

பின்னர், காவிரி மைசூர் நாட்டில் புகுந்து ஹாஸன் ஜில்லாவின் வலப்புறமாகவே ஓடி வரு கின்றது. அது மலைப்பாங்கான பிரதேசம். அங்கு ஆற்றின் படுகை ஆழமாக இருக்கின்றது. நிலங்கள் கற்பாறைகளாதலால் அங்குக் காவிரிநீர் பெரும்பாலும் உழவுக்குப் பயன்படவில்லை. சிற்சில இடங்களில்மட்டும் களிமண் நிலங்களில் சிறிதளவு உழவுத்தொழில் நடைபெறுகிறது.

கிருஷ்ணராஜ சாகரம்

இங்ஙனம் பாய்ந்து வரும் காவிரியாறு சுஞ்சின் கட்டே என்னும் இடத்தில் குறுகிய பாறைகளுக் கிடையே ஓடிவருகிறது. அங்கு ஆழம் அதிகம். காவிரி அங்கு 60 முதல் 80 அடி உயரத்திலிருந்து அருவியாய்க் கீழே விழுந்து பாய்கிறது. பின்னர் அஃது **எடத்தூர்** என்னும் ஊருக்கருகில் சற்று



கிருஷ்ணராஜ சாகரம் : நீர்த்தேக்கம்

வடக்காக ஓடுகிறது. இங்ஙனம் செல்லும் போது திப்பூர் என்னுமிடத்தில் வடக்கே இருந்து ஹேமாவதி என்னும் சிறந்த ஆறு ஒன்று தன் வளங்களை எல்லாம் கொழித்துக்கொண்டு காவிரிக்குக் காணிக்கையாகக் கொடுத்து அதனுடன் இரண்டறக் கலந்துவிடுகிறது. ஹேமாவதியின் வளத்தால் உடல் பூரித்த காவிரி மேலும் தன் தொண்டில் உற்சாகமுடன் தென்கிழக்காகத் திரும்புகிறது. சிறிது தூரத்தில் இலட்சுமண தீர்த்தம் என்னும் மற்றோர் அழகிய சிற்றாறு பைரபூர் என்னுமிடத்தில் காவிரியுடன் கலக்கிறது. இங்ஙனம் மும்மடங்காகப் பெருகிய காவிரி வெள்ளமே 'கிருஷ்ணராஜ சாகரம்' என்னும் பெயருடன் பெரிய நீர்த்தேக்கமாய் மைசூர் நாட்டின் வளத்திற்கெல்லாம் காரணமாய் அமைந்துள்ளது. இம்முக்கூடலின் மறுமுனையில் மைசூரின் மிகச் சிறந்த அணையாகிய 'கண்ணம் பாடி' அணை கட்டப்பட்டுள்ளது. இவ்வணையால் மைசூர் நாடு அடைந்துவரும் பயன்கள் அள வற்றனவாகும். இயற்கை அழகு மிக்க இந்த இடத் தில் அழகுக்கு அழகு செய்வதுபோல் 'பிருந்தா வனம்' என்ற அழகுத் தெய்வத்தின் ஆலயத்தை மக்கள் அமைத்துள்ளனர்.

சீரங்கப்பட்டணம்

கண்ணம்பாடி அணையால் கட்டுப்படுத்தப்பட்ட காவிரியாறு சிறிதும் சலிப்படையாமல் முன்னிலும் பன்மடங்கு வேகமுடன் கிழக்கு நோக்கிப் பாய்கிறது. இங்ஙனம் செல்லும் அதன் நெறியில் இடையிடையே சிறிய தீவுகள் ஏற்பட்டுள்ளன. அவைகளில் பெரியது சீரங்கப்பட்டணம் என்னும் இடத்தில் அமைந்

துள்ள தீவேயாகும். அந்த இடத்திற்கு மேற்கில் உள்ள **கௌதம ஆசிரமம்** என்னும் இடத்தில் காவிரிநதி இரண்டாகப் பிரிந்து சீரங்கப்பட்டணத் தைச் சுற்றிச் செல்கின்றது. இவ்வாறு பிரிந்த வட கிளையோடு **லோகபாவனி** என்னும் சிற்ருறு ஒன்று வந்து கலக்கிறது. தென் கிளையே காவிரியாறு. எட்டுக்கல் தூரத்துக்கு அப்பால் வடகிளை தென்புற மாக ஓடிக் காவிரியுடன் கலக்கிறது. அவ்வாறு சேருமிடம் '**சங்கமம்**' என்று வழங்கப்பட்டு வருகிறது.

தாலக்காடு

அதற்குப் பிறகும் காவிரி தென்கிழக்காகவே ஓடி **நரசிபூர்** என்னும் ஊரை அடைகிறது. அவ்விடத்தில் **கப்பினி** என்னும் ஓராறு தெற்கி லிருந்து வந்து காவிரியுடன் கலக்கிறது. பின்னர், காவிரி கிழக்காகத் திரும்பிச் சிறிது தூரம் ஓடி, மீண்டும் தென்புறம் திரும்புகிறது. இவ்விடத்தில் சரித்திரப் புகழ்பெற்ற **தாலக்காடு** என்ற சிறந்த ஊர் உள்ளது.

சிவசமுத்திர நீர்வீழ்ச்சி

தாலக்காட்டைத் தாண்டியதும் காவிரியாற்றில் **சுவர்ணுவதி** என்னும் சிற்ருறு வந்து கலக்கிறது. இங்ஙனம் பற்பல துணையாறுகளின் கூட்டுறவால் உருவிலும் திருவிலும் சிறப்புற்ற காவிரி மீண்டும் வளைந்து வடகிழக்காகவும் வடக்கு நோக்கியும் பாய்கிறது. இவ்விடத்தில்தான் உலகப்புகழ் பெற்ற சிவசமுத்திர நீர்வீழ்ச்சி அமைந்துள்ளது. சிவ சமுத்திரமும் சீரங்கப்பட்டணத்தைப் போல ஒரு

சிறு தீவேயாகும். இங்குக் காவிரியாறு வடபுறம் நோக்கி ஓடுவதால் அதன் கிளைகள் மேற்கில் ஒன்றும் கிழக்கில் ஒன்றுமாக அமைந்துள்ளன. மேற்கில் உள்ள அருவி **ககனசுகி** என்று வழங்கப்படுகிறது. கிழக்கில் உள்ளது **பார்சுகி** என்று கூறப்படுகிறது. இவ்விரண்டும் மூன்று மைல் தூரம் ஓடிப் பின்னர் 250 அடி ஆழம் அருவிகளாய் வீழ்ந்து வடகிழக்குப் பகுதியில் ஒன்று கூடுகின்றன. காவிரியாற்றின் போக்கில் இயற்கை அன்னை களி நடமிடும் இடம் இதுவே. இவ்வியற்கை வளம் ததும்பும் அருவியின் பேரெழிலைக் காண உலகின் பல பாகங்களிலிருந்தும் மக்கள் திரள்கின்றனர்.

ககனசுகியின் காட்சி

ககனசுகி கம்பீரமான தோற்றத்தை உடையது ; காண்பவர்க்குப் பேரச்சத்தை விளைப்பது. இந் நீர் வீழ்ச்சியின் காட்சி மிக்க அழகானது. காவிரியாறு பாறைகளின்மேல் அடர்ந்த புதர்களுக்கு நடுவில் ஓடி வந்து நீர்வீழ்ச்சிக்கு மேலே மூன்று கிளைகளாகப் பிரிந்து விழுகிறது. ஒன்று சரிவாகவும், மற்றொன்று 150 அடி செங்குத்தாக வீழ்ந்து நாலைந்தடி தூரம் ஓடி மீண்டும் 100 அடி ஆழம் செங்குத்தாகவும், மூன்றாவது முழுவதும் செங்குத்தாகவும் பேரிரைச்சலுடன் விழுகின்றன. பல நிறங்களுடைய பாறைகளின்மீது இவ்வருவிகள் விழுவது இயற்கை அன்னை அணிந்த பூமாலைகளைப் போலப் பொலிகின்றன. அங்ஙனம் விழுகையில் உண்டாகும் நீர்ப் படலம் புகைபோல் வானையளாவி நிற்கின்றது. இப் புகைப்படலத்தை மக்கள் நீண்ட தூரத்திற்கப்பால் காணக்கூடும். ‘உலகில் வேறெந்தப் பகுதியிலும்

இதுபோன்ற வனப்புமிக்க நீரருவியை நான் கண்ட தில்லை,' என வியக்கிருர் மேனுட்டு யாத்திரிகரான புக்கனன்.

பார்சுகியின் பேரழகு

காவிரியின் கிழக்குக் கிளையில் காணும் பார்சுகி என்ற அருவி ககனசுகியைப்போல் அச்சத்தை விளைப்பதன்றேனும் அழகில் அதற்கீடானதேயாகும். ககனசுகியில் நீரோட்டம் விரைந்தும் குறுகியும் காணப்படுகிறது. பார்சுகியிலோ சற்று அமைதி யாயும், நீர்ப்பரப்பு சற்று அகன்றும் காணப் படுகிறது. இவ்வருவி ககனசுகியிலிருந்து ஒரு மைல் தூரத்தில் உள்ளது. நாம் இதனருகில் மிக எளிதில் சென்று அவ்வழகிய காட்சியை அகங் குளிரக் கண்டு மகிழலாம். மழைக்காலத்தில் இதில் வெள்ளம் மிகுதியாகப் புரண்டோடும். கால் மைல் அகலத்துக்கு இடையருத நீர்த்தொகுதி ஒரே தாரையாக வெண்ணிறப் படாம் போர்த்தாலென மலையின் முகட்டிலிருந்து கீழே சொரியும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும். கோடைக் காலத்தில் இது பல சிறிய அருவிகளாகப் பிரிந்து பேரழகுடன் திகழ்கிறது. பாறையின் உச்சியில் குதிரைலாடம் போன்ற ஆழமான பகுதி உள்ளது. இதன் மூலமாக முக்கியமான நீர்ப்பகுதியெல்லாம் ஒருங்கு திரண்டு கீழே பாய்ந்து ஒரு சிறு வாய்க்காலாகி மிக்க விரைவாய் ஓடி, மீண்டும் 30 அடி இறங்கிப் பாறையின் அடிவாரத்தில் உள்ள பெரிய குளத்தில் கலக்கிறது. பின்னர் இது வடபுறமாகவே பல குறுகிய மலைக்குடைவுகளின் வழியாக ஓடி இறுதியில் மேற்குக் கிளையுடன் ஒன்று கூடுகிறது.

ஆடுதாண்டும் காவிரி

இங்ஙனம் ஒன்ருகிய காவிரி கிழக்குப் புறமாகப் போக்கை மாற்றிக்கொண்டு ஒரு குறுகிய மலைக் குடைவின் வழியே ஓடுகிறது. இவ்விடத்தினருகில் வடபால், ஷிம்ஷா, அர்க்காவதி என்னும் ஆறுகள் காவிரியுடன் கலக்கின்றன. பின்னர்க் காட்சி



ஆடுதாண்டும் காவிரி

மாறுகிறது. இருபுறமும் மலைச்சரிவுகள் இருப்ப, இடையே பன்னிரண்டு அடி அகலத்தில் காவிரி நீர் ஓடுகிறது. இவ்விடத்தில் ஒரு கரையிலிருந்து மற்ருெரு கரைக்கு ஓராடும் தாண்டிவிடலாம். ஆதலால் இவ்விடத்திற்கு ‘மேகதாடு’ அல்லது ‘ஆடுதாண்டும் காவிரி’ என்பது பெயர். அப்பால் காவிரி ஆறு சேலம் கோயம்புத்தூர் எல்லைகள்

மைசூர் எல்லையைத் தொடுமிடத்தில் மைசூர் நாட்டை விட்டு நீங்குகிறது.

3. கொங்குநாடும் காவிரியும்

மைசூர் நாட்டைவிட்டு அகன்ற காவிரி கொங்கு நாட்டில் புகுந்து சேலம் கோயம்புத்தூர் மாவட்டங்களுக்கு எல்லையாக வளைந்து வளைந்து பாய்கிறது. இங்ஙனம் காவிரி பாய்கையில், பல ஆறுகள் அதனுடன் கலக்கின்றன.

ஹொகெனகல் நீர்வீழ்ச்சி

காவிரி மைசூர் நாட்டைவிட்டு நீங்கியதும் சிறிது தூரத்தில் மிகவும் பெயர்பெற்ற ஹொகெனகல் நீர்வீழ்ச்சி உள்ளது. இவ்வருவி கற்பாறையில் மோதும்போது நீர்த்துளிகள் புகைபோல் வானை யளாவுவதால் இதற்குக் கன்னடர் தங்கள் மொழியில் 'ஹொகெனகல்' என்று பெயரிட்டனர். நீர்வீழ்ச்சியினடியில் உள்ள பெரிய மடுவிற்கு 'யாககுண்டம்' என்பது பெயர். இது மிகவும் புனிதமானது. நீண்ட காலத்துக்கு முன் இப்பகுதியில் வேட்டையாடித் திரிந்த சோழ அரசன் ஒருவன், காவிரியாறு அருவியாய் மடுவில் வீழ்ந்து வெளிப்படாமல் மறைந்து விடுவதைக் கண்டு, அது மீண்டும் பெருக்கெடுத்தோடுமாறு எட்டாண்டு வரையில் பலவித முயற்சிகள் செய்தான்; என்ன செய்தும் ஆற்றுநீர் ஒரு துளியும் வெளிப்படாமையால் மனம் சோர்ந்தான். அவனது விடாமுயற்சியைக் கண்ட முனிவர் ஒருவர் அருள் கூர்ந்து, அங்குத் திருமாலின் சக்கரம் இருப்பதாகவும், நீதி தவருத மன்னன் தன் ஆருயிரைத்

தியாகம் செய்தால் காவிரி பெருக்கெடுக்குமெனவும் கூறினர். தன்னலம் கருதா அம் மன்னவனும்



ஹொகெனகல் : புகைப்படலம் தொலைவில் காட்சி தருதல்

உலகம் வாழ அவ்வரிய செயலைப் புரிந்தான். அக் காரணத்தாலேயே காவிரி சோணுடு நோக்கிப் பாயலாயிற்று என ஒரு வரலாறு கூறப்படுகிறது.

மேட்டூர் அணை

ஹொகெனகல் நீர்வீழ்ச்சியைத் தாண்டிக் காவிரி பலபடியாகத் திரும்பி ஓடுகிறது. இப்பகுதியில் 'சின்ஞறு' என்னும் பெயருடைய சனத்குமார நதியும், தோப்பூராறும் காவிரியுடன் கலக்கின்றன. இவ்யாறுகள் யாவும் கிழக்குப் பகுதியிலேயே அமைந்

துள்ளன. திருச்செங்கோடு, ஓமலூர் தாலுக்காக்களில் காவிரி வடக்கு-தெற்காகவே ஓடுகிறது. இப்பகுதியில் காவிரியின் போக்கை ஒட்டிக் கிழக்குப் புறத்தில் சீதாமலை என்னும் தொடரும், மேற்குப் புறத்தில் பாலமலை என்னும் தொடரும் அமைந்துள்ளன. இவ்விரண்டு மலைத்தொடரும் ஓரிடத்தில் ஒன்று சேர்வதுபோல நெருங்கி வந்துள்ளன. இம் மலைகளுக்கிடையில் காவிரியாறு பாய்ந்து செல்கிறது. இத்தகைய இயற்கை வசதி வாய்ந்த இடத்திலேயே உலகப் புகழ் பெற்ற மேட்டூர் அணை கட்டப்பட்டுள்ளது. இவ்வணைக்கு அப்பால் காவிரி யாறு மலை நாட்டினின்று சமவெளிப் பிரதேசத்தில் பாயத் தலைப்படுகிறது. ஏறக்குறைய இருபத்து நான்கு மைல் தூரம் ஓடிய பிறகு காவிரியாற்றுடன் பவானி என்னும் ஆறு பவானி என்னும் ஊருக்கருகில் கலக்கிறது.

கொங்கு நாட்டில் காவிரியின் நிலை

கொங்கு நாட்டுப் பகுதியில் காவிரி மிகவும் ஆழமானது. தண்ணீர் வேகமாய்ப் பாய்வதால் பரிசில்கள் மூலமாகவே ஆற்றைக் கடக்க முடியும். அதுவும் குறிப்பிட்ட சில இடங்களில்தான் கூடும். பவானிக்குத் தெற்கே ஈரோடு, ஜோலார்பேட்டை இருப்புப் பாதை காவிரியைக் கடக்கிறது. இவ்யாற்றுக்கு அருகில் 'காவிரி' என்னும் இரயில் நிலயம் உள்ளது. அந்நிலயத்தைத் தாண்டியதும் இரயில் காவிரியைக் கடப்பதற்கு 450 கஜம் நீளமுள்ள இருப்புப் பாலம் அமைக்கப்பட்டுள்ளது. பின்னர்க் காவிரி ஈரோட்டினை அடைகிறது. ஈரோட்டினை அடைந்த பின் காவிரியின் போக்கு சோழநாட்டை நோக்கி

மாறுகிறது. தென் கிழக்காகவே பல மைல் தூரம் பாய்ந்தபின் கோயம்புத்தூர் மாவட்டத்தின் வழியே கிழக்கு நோக்கிப் பாயும் நொய்யல் என்னும் மற்ருெரு கிளைநதி காவிரியுடன் கூடுகிறது. மற்றும்

காவிரியைப் பரிசில்மூலம் கடத்தல்

சில மைல்களுக்கு அப்பால் வடக்குப் புறத்திலிருந்து பாய்ந்து திருமணி முத்தாறு என்னும் சேலம் ஆறு காவிரியுடன் கலக்கிறது. இதனுல் நீர்ப்பெருக்கு நிரம்பிய காவிரி, தோற்றத்தில் கம்பீரமும் உருவத்தில் பொலிவும் உற்றுத் தோற்றுகிறது. காவிரி பின்னர் நேர் கிழக்காகத் திருச்சி மாவட்டத்தில் பாயத் தொடங்குகிறது.

4. சோழ நாட்டில் காவிரி

அகண்ட காவிரி

திருச்சி மாவட்டத்திற் புகுந்த காவிரி கிழக்கு நோக்கிச் சிறிது தூரம் சென்றபின் மீண்டும் தென் கிழக்காகப் பாய்கிறது. சில மைல்களுக்கப்பால் அமராவதி என்னும் சிற்ருறு கரூருக்கருகில் காவிரியுடன் கூடுகிறது. இங்ஙனம் பற்பல ஆறுகள் கலக்கப்பெற்றுக் காவிரி மிகப் பெரிய உருவத்தோடு தோற்றுகிறது. அடுத்த காட்சி காவிரியின் விசுவரூபக் காட்சியாகும். இது வரையில் ஆறுகள் பலவும் காவிரியுடன் கலந்துள்ளனவே ஒழியக் காவிரியாறு தன்னிடமிருந்து கிளை நதிகளை ஏற்படுத்தவில்லை. திருச்சிக்கு மேற்கே ஒன்பது கல் தொலைவில் உள்ள இலமனூர் என்னும் இடத்தில்தான் காவிரியில் முதன்முதலாகக் கொள்ளிடம் என்னும் கிளைநதி பிரிகிறது. எனவே, பிரிவுபடாத காவிரியின் இப்பகுதிக்கு அகண்ட காவிரி என்னும் பெயர் வழங்குகின்றது. கண்டம் என்ருல் பிரிவு. அகண்டம் என்ருல் பிரிவு இல்லாதது என்பது பொருள். காவிரியாறு தோற்றமான தலைக் காவிரியிலிருந்து இவ்விடம் வரை பிரிவுபடாமல் அகண்ட காவிரியாகவே வந்தாலும், இப்பகுதிக்குத்தான் சிறப்பாக அப்பெயர் வழங்குகிறது. இதனை அடுத்துக் காவிரி பிரிகின்ற காரணத்தால் அப்பெயர் இங்குச் சிறப்பாக வழங்கப்பட்டது போலும்! இவ்விடத்தில் காவிரியாறு ஏறக்குறைய ஒரு மைல் அகலமுடையதாய்க் கண்ணுக்கெட்டிய தூரம் ஒரே நீர்ப்பரப்பாய்க் காட்சியளிக்கிறது. காவிரியாறு இங்கு அகண்ட காவிரியாகக் காட்சியளிப்பதுடன் அகன்ற காவிரியாகவும் காட்சியளிக்கிறது. காவிரி

யாறு தன் போக்கில் பூரண உருப்பெற்றுப் பேரழகுடையதாய்த் திகழும் இடம் இதுவேயாகும்.

கரைபோட்டாறு கலத்தல்

இப்பகுதியில் வடக்கிலிருந்து **கரைபோட்டாறு** என்னும் சிற்ருறு ஒன்று குளித்தலைக்குச் சற்று வடக்கில் காவிரியுடன் கலக்கிறது. இந்த ஆறு முன்பு சோழநாட்டிற்கும் பாண்டிய நாட்டிற்கும் எல்லையாக இருந்ததென்றும், அதனாலேயே அப்பெயர் பெற்றது என்றும் அறிஞர் கூறுவர். இவ்விடத்தில் காவிரியின் தென் கரையில் திருப்பராய்த்துறை என்ற பாடல் பெற்ற சிவத்தலமும் வட கரையில் குணசேகரபுரம் என்ற சிறந்த வைணவத் தலமும் உள்ளன.

மேலணை

இங்குக் கொள்ளிடத்தின் குறுக்கே மேலணை என்னும் சிறந்த அணை கட்டப்பட்டுள்ளது. காவிரியின் படுகையைவிடக் கொள்ளிடத்தின் படுகை சற்று ஆழமாக இருப்பதால் காவிரியின் நீர் முழுவதும் கொள்ளிடத்தின் வழியே ஓடிச் சென்று, தஞ்சாவூர் மாவட்டத்தில் பயிர்த் தொழிலுக்கு இடையூறு ஏற்பட்டதால், கொள்ளிடத்துக்குக் குறுக்கே இவ்வணையைக் கட்டி நீரைக் காவிரிக்குத் திருப்பியுள்ளார்கள்.

திருவரங்கம்

தென்கிளையாகிய காவிரியாறு கிழக்கு நோக்கிப் பதினேழு மைல் ஓடியபின் கொள்ளிடம் இதன் அருகில் நெருங்கி வருகிறது. உள்ளாறு என்னும் வாய்க்கால் இவ்விரண்டையும் இணைக்கிறது. இங்கு ஒரு

தீவு ஏற்பட்டுள்ளது. இது காவிரியில் தோன்றிய மூன்ருவது அரங்கமாகும். இதில் சீரங்கம் என்னும் புண்ணியத்தலம் உள்ளது. இங்குத் தென்திசை நோக்கிப் பள்ளிகொண்ட கோலத்திலிருக்கும் பரந் தாமனின் பாத மலரடிகளை வருடி அவனருள் பெற் றுக் காவிரி அன்னை தஞ்சை மாவட்டத்தை நோக்கி வருகிருள். இங்குச் சோழர்களின் மிகப் பழைய தலைநகரமான சரித்திரப் புகழ் பெற்ற உறையூர் காவிரியின் கரையில் அமைந்து விளங்குகிறது.

கல்லணை

உள்ளாறு காவிரியையும் கொள்ளிடத்தையும் இணைக்கும் இடத்தில் காவிரிக்குக் குறுக்கே கல்லணை என்னும் அணை கட்டப்பட்டுள்ளது. காவிரியின் குறுக்கே கட்டப்பட்ட பெரிய அணைகளில் இதுவே முதலாவதாகும். இவ்வணை மிகப் பழங்காலத்திலேயே சோழ மன்னன் ஒருவனுல் கட்டப்பட்டதாகும். இஃது அண்மையில் சிறந்த முறையில் மாற்றி அமைக்கப்பட்டு கிராண்ட் அணைக்கட்டு என்று வழங்கப்பட்டுவருகிறது.

காவிரியின் கிளைநதிகள்

காவிரியின் கிளைநதிகளில் மிகப் பெரியது கொள்ளிடமாகும். அதிகமான நீர்ப் பெருக்கைத் தன்னிடத்தே கொண்டுள்ளமையால் இதற்குக் 'கொள்ளிடம்' என்று பெயர் அமைந்தது என்று கருதலாம். இந்த ஆறு தன் தாய் நதியாகிய காவிரி யினும் பெரிய உருவத்தினையுடையதாய் வடகிழக்குப் புறமாக ஓடித் தென்ஞர்க்காடு மாவட்டத்தை வளப் படுத்தித் தேவி கோட்டை என்னும் இடத்தில்

கீழ்க்கடலில் கலக்கிறது. கல்லணையைத் தாண்டியதும் காவிரி பற்பல சிற்ருறுகளாகப் பிரிகிறது. அவற்றில் முதன்மையானது வெண்ணுறு. இவ் வெண்ணுறு பற்பல கிளைநதிகளாகப் பிரிந்து தஞ்சாவூர் மாவட்டத்தின் பற்பல பாகங்களிலும்



கல்லணைக் கிளைக் கால்வாய்களின் தோற்றம்

பாய்ந்து நீர்வளம் கொழித்து உழவுத் தொழிலுக்குப் பேருதவி செய்கிறது. மற்றும் தஞ்சை மாவட்டத்தில் காவிரியும் பற்பல கிளைநதிகளும் உடலில் அமைந்துள்ள இரத்தக் குழாய்களைப்போலப் பரவி, பார்க்குமிடமெங்கும் நீக்கமற நிறைந்துள்ள பரம்

பொருளைப்போல் எங்கும் நீர்ப்பரப்பேயாகிச் சோழ நாட்டை நீர்நாடு, புனல்நாடு, வளநாடு என்று கூறத்தக்க பெருமையுடையதாய்ச் செய்துள்ளன. அத்தகைய கிளைநதிகளில் சிறப்பானவை குட முருட்டி, வெட்டாறு, அரிசிலாறு, வீரசோழனாறு, வடவாறு, பாமணியாறு, திருமலைராஜனாறு முதலி யனவாம். இக்கிளைநதிகளிலிருந்து நூற்றுக்கணக் கான மைல் நீளம் கால்வாய்கள் வெட்டப்பட்டுள்ளன. இவை தோற்றுவித்துள்ள குளங்களும் ஏரிகளும் எண்ணில் அடங்காதன. என்னே காவிரித்தாயின் கருணை !

திருவையாறு

சோழநாட்டில் காவிரிநதி சமவெளிப் பிரதேசத் தில் பாய்வதால் அதன் போக்கில் மாறுதல் இல்லை; உருவத்தில் மட்டும் மாறுதல் ஏற்பட்டு வருகிறது. பல கிளை நதிகளைத் தோற்றுவித்த காவிரி தென் கயிலாயம் என வழங்கப்படும் திருவையாறு என்னும் சிறந்த சிவத்தலத்தை அடைகிறது. இவ்வூர் அழகும் வளமும் ஒருங்கே அமைந்த நல்லூராகும். இது தஞ்சாவூருக்கு வடக்கே ஏழு கல் தொலைவில் உள்ளது. காவிரியின் போக்கில் ஐயாறு சிறப்பாகக் குறிப்பிடத் தக்க பெருமை வாய்ந்த பதியாகும். தஞ்சாவூரி லிருந்து ஐயாற்றை அடையும் ஏழு கல் தொலைவிற் குள் வெண்ணாறு, வெட்டாறு, குடமுருட்டி, காவிரி என்ற நான்கு ஆறுகளும், ஐயாற்றுக்கு மூன்று கல் வடக்கே கொள்ளிடமும் பாய்ந்தோடுகின்றன. இவ் விதம் ஐந்தாறுகள் பாய்ந்து வளஞ்செய்யும் காரணத் தாலேயே அவ்வூர் ஐயாறு எனப் பெயர்பெற்றது. அவ்வூரில் உள்ள அரசர் கல்லூரி என்னும் கலா

நிலயம் குறிப்பிடத்தகுந்த பெருமையுடையது. காவிரியின் நீரோட்டத்திலேயே அழகுற அமைக்கப் பட்டுள்ள அக்கல்லூரியின் அமைப்பே பார்த்து



திருவையாறு : காவிரிக்கரையில் அரசர் கல்லூரி

மகிழவேண்டும் காட்சியாகும். தென்னுட்டில் அத் தகையதோர் அழகிய காட்சியினே வேறு எங்கும் காணல் இயலாது.

சுவாமி மலே

அதற்கடுத்த காட்சியாகக் குறிப்பிடத்தக்கது சுவாமி மலேயாம். இது தமிழ்த்தெய்வமாக விளங்கும் முருகவேளின் ஆறு படைவீடுகளில் சிறந்ததாகும். இங்குத்தான் குழந்தை முருகன் சிவபெருமானுக்கே குருவாய் விளங்கி அவர்க்குப் பிரணவத்தின் பொருளே

உபதேசித்துச் சுவாமிநாதனுய் வீற்றிருக்கிருர். அத்தகைய அழகிய பதி பொன்னியின் கரையில் பொலிவுடன் திகழ்கிறது.

கும்பகோணம்

பின்பு காவிரியாறு தஞ்சாவூர் மாவட்டத்தில் மிகச் சிறந்து விளங்கும் நகரமாகிய கும்பகோணத் தினை அடைகிறது. இது பாடல்பெற்ற சிவாலயங்



கும்பகோணம் : காவிரிக்கரையில் அரசாங்கக் கல்லூரி

களையும் வைணவ ஆலயங்களையும் கொண்டு திகழும் அழகிய ஊராகும். இது வாணிக வளம் சிறக்கப் பெற்று விளங்குகிறது. பன்னிரண்டு ஆண்டிற்கு ஒருமுறை மாசி மாதம் மகநட்சத்திரத்தின் போது 'மகாமகம்' என்ற பெரிய புண்ணிய நீராட்டுவிழா

இவ்வூரில் நடைபெறும். இந்தியா முழுவதும் உள்ள பக்தர்கள் யாவரும் அந்நன்னுளில் அங்கு வந்து மகாமகக்குளம் என்ற குளத்தில் நீராடுவர். அன்று அக்குளத்து நீரில் கங்கை முதலான ஏழு ஆறுகளும் வந்து கலப்பதாக ஐதிகம். ஏழு ஆறுகளிலும் நீராடிய நன்மை அன்று அங்கு நீராடுவதால் கிடைப்ப தாலேயே இலட்சக்கணக்கான மக்கள் அந்நன் னுளில் அங்குக் கூடுவர். மகாமகக்குளத்தில் நீராடி யவர்கள் உடனே காவிரிநதியிலும் நீராடவேண்டும் என்பது தொன்றுதொட்டு வழக்கமாக இருந்து வருகிறது.

மாயூரம்

பிறகு காவிரி மாயூரத்தை வந்தடைகிறது. இங்குக் காவிரியின் உருவம் மிகவும் சுருங்கிக் காணப்படுகிறது. காவிரி கடலுடன் கலக்கும் இடத்தை அணுகவே, அதன் உருவமும் சுருங்கி விட்டது. காவிரி எவ்வளவு அதிகமாகத் தன் வளத்தை யெல்லாம் தன் மக்கட்கு வாரி வழங்க முடியுமோ அவ்வளவு அதிகமாக வழங்கிவிட்டு மெலிந்த கோலத் துடன் மாயூரத்தினை வந்தடைகிறது. ஐப்பசித் திங்களின் கடைநாளன்று மாயூரத்தில், காவிரியில் நீராடுவதைப் பெரும்பேருக மக்கள் கருதுகின்றனர். அது ‘கடை முழுக்கு’ என்று சிறப்பாகக் கூறப் படுகிறது.

மூங்கிற் பாலத்தின்கீழ்க் காவிரி

காவிரித் தாயின் அடுத்த தோற்றம் நம் கண் கலங்கக் கூடிய தோற்றமாகும். பேருருவுடன் விரைந்த செலவினையுடையதாய் ஆரவாரத்துடன்

வந்த காவிரி இந்த இடத்தில் சிறு வாய்க்கால் போல் காட்சியளிக்கிறது. இங்குக் காவிரியின் அகலம் சுமார் இருபது கெஜங்களே இருக்கும். மக்கள் காவிரியைக் கடக்க இங்கு மூங்கிலால் பாலம் அமைத்



மூங்கிற்பாலம் : காவிரியின் மெலிந்த தோற்றம்

துள்ளனர். இவ்விடத்தில் காவிரியின் நீர் மிக்க அமைதியாகச் செல்கிறது என்பது இதிலிருந்தே நன்கு விளங்கும். இக்காட்சியைக் காண்பவர் ஒவ்வொருவரும் காவிரித்தாயின் அளப்பருங் கருணையை நினைத்துப் போற்றாமல் இரார்.

காவிரி கடலுடன் கலத்தல்

பின்னர், காவிரியாறு தரங்கம்பாடிக்குப் பத்துக் கல் வடக்கே கடலில் கலக்கிறது. காவிரி கடலொடு

கலக்கும் இச்சங்கமுகத்துறைதான் காவிரியின் தீர்த் தங்களில் எல்லாம் பெருஞ் சிறப்புடைய புண்ணிய தீர்த்தமாகக் கருதப்படுகிறது. காவிரி கடலொடு கலக்கும் இவ்விடத்தில்தான் தமிழ் நாட்டின் உயரிய நாகரிகத்திற்கு—உலகம் போற்றும் ஒப்பற்ற பெருமைக்கு—ஊற்றிடமாய் அமைந்து விளங்கிய **காவிரிப்பூம்பட்டினம்** என்ற சோழர்தம் ஒப்புயர் வற்ற பெரிய தலைநகரம் அமைந்து விளங்கியது. இப்போது அந்நகரம் கடல்கொள்ளப்பட்டு மண் மேடிட்டு ஒரு சிற்றூராகக் காட்சியளிக்கிறது.

தமிழர் கடமை

இங்ஙனம் காவிரிப் பேரியாறுனது தலைக்காவிரி யிலிருந்து ஏறக்குறைய 480 கல் தொலைவு நான்கு நாடுகளின் வழியாய்த் தன் நீண்ட பிரயாணத்தைச் செய்து கீழ்க்கடலிற் குளிக்கின்றது. தமிழ் நாட்டின் பெருமைக்கு—வளத்துக்கு, தலைநிமிர்ந்த வாழ்வுக்கு —காரணமாக விளங்கும் வளம் மிக்க இப் பேரியாற் றினைத் தமிழ்நாடு உள்ளவரை தமிழர்கள் போற்றிப் புகழ்ந்து நன்றி பாராட்டக் கடமைப்பட்டுள்ளனர் அன்றோ !

5. நகரங்கள்

வளமிக்க பொன்னி நதிக்கரையில் புகழ்பெற்ற சிற்றூர்களும், பேரூர்களும், தலைநகரங்களும் பல விளங்கித் திகழ்கின்றன. அவற்றில் சரித்திரப் புகழ்பெற்ற சில நகரங்களைப்பற்றி மட்டும் இங்கு விளக்குவோம்.

சீரங்கப்பட்டணம்

காவிரியின் போக்கையொட்டிக் குறிப்பிடத் தகுந்த நகரங்களில் சீரங்கப்பட்டணமே முதன்மை



சீரங்கப்பட்டணத்தில் பழைய கல்பாலம்

பெறுகிறது. இது மைசூர் நாட்டில், மைசூருக்கு வடகிழக்கில் பத்துக்கல் தொலைவில் காவிரிக்கு இடையில் அமைந்துள்ளது. இவ்வூருக்கு மேற்கே கௌதம ஆசிரமம் என்னும் இடத்தில் காவிரி இரு பிரிவாகப் பிரிந்து ஒரு தீவினை உண்டாக்கி எட்டுக் கல் தூரத்திற்கப்பால் மறுபடியும் ஒன்ருய்க் கூடுகிறது. இத் தீவுதான் சீரங்கப்பட்டணம். ஆற்றுக்

கிடையில் உள்ள பட்டணம் ஆகையால் இஃது அரங்கம் எனப் பெயர்பெற்றது. காவிரியின் போக்கில் ஏற்பட்டுள்ள அரங்கங்கள் பலவற்றில் இதுவே முதலாவதாகையால் இஃது ஆதிரங்கம் எனப் போற்றப்படும். இத்தீவில் அரங்கநாதர் பள்ளிகொண் டிருக்கும் ஆலயம் ஒன்றுள்ளது. கௌதம முனிவர் இவ்விடத்தில் அரங்கநாதரை வழிபாடு செய்ததாகப் பழைய புராண வரலாறு கூறுகிறது. இவ்வூருக்கு மேற்கே காவிரி பிரியுமிடத்தில் வடபுறத்தில் இரு பாறைகள் உள்ளன. அவற்றின் அடியில் உள்ள அழகிய குகையில்தான் அம்முனிவர் தவம் புரிந்தன ராம். அக்குகை இப்போது மூடப்பெற்றுளது.

அரங்கநாதர் கோயில்

இவ்வூரிலுள்ள அரங்கநாதர் கோயில் கோபுரம் தென்னாட்டுக் கோபுரங்களைப்போல் மிக்க அழ கானது; மிக்க உயரமானது; கோயிலினுள் மூல விக்கிரகம் மிகப் பெரியது. அரங்கநாதர் திருவடி களுக்கருகில் காவிரியன்னை அமர்ந்த திருக்கோலத் தில் வீற்றிருக்கிறாள். கௌதம முனிவர்தம் உருவ மும் அருகிலுளது. கருப்பக்கிருகத்தின் முன்புறத்தில் திருமாலின் இருபத்து நான்கு உருவங்கள் பெயர் களுடன் செதுக்கப்பட்ட இரண்டு கம்பங்கள் உள்ளன. அக்கோயிலில் புதியனவும் பழையனவு மாகிய பல கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. கி. பி. 1210-இல் செதுக்கப்பட்ட தமிழ்க் கல்வெட் டொன்று வெளி மதிற் சுவரில் காணப்படுகிறது.

பிற கோயில்கள்

அரங்கநாதர் கோயிலைத் தவிரச் சீரங்கப்பட்ட ணத்தில் கங்காதரேசுவரர் கோயிலும், நரசிம்ம சுவாமி கோயிலும் உள்ளன. ஈசுவரரின் ஆலயமும் சிற்பக் கலையில் சிறந்து விளங்குகிறது. இங்குள்ள நவரங் கத்தில் பற்பல சிறந்த வேலைப்பாடுகள் அமைந்த திரு வுருவங்கள் காணப்படுகின்றன. இக்கோயில்களே யன்றி, ஒரு சிறந்த மசூதியும் இங்குள்ளது. அதில் பாரசீக மொழியில் கல்வெட்டுக்களும், அல்லாவின் 99 பெயர்களும், குர்-ஆனிலிருந்து தேர்ந்தெடுக்கப் பெற்ற தொடர்களும் சுவர்களில் காணப்படுகின்றன. காவிரியின் வடகிளையின்மீது அமைந்துள்ள 'வெஸ்லி பாலம்' திவான் பூர்ணையா என்பவரால் 1804-இல் கட்டப்பட்டதாகும்.

வரலாற்றுச் சிறப்பு

சீரங்கப்பட்டணம் புண்ணியத்தலமாக விளங்குவ தோடு சரித்திரப் புகழ்பெற்ற நகரமுமாகும். ஆயிரம் ஆண்டுகட்கு முன்னர், கங்க மன்னருக்கு அடங்கிய திருமலையா என்னும் சிற்றரசர் அரங்கநாதர் ஆலயத் தையும் நகரைச் சுற்றி மதிற் சுவர்களையும் அமைத் துச் சீரங்கப்பட்டணம் என்ற பெயரை இதற்கு வழங்கினர். பின்னர் ஹொய்சலர்களும் விஜயநகர மன்னர்களும் மைசூர் மன்னர்களும் இப்பகுதியை ஆண்டனர். இறுதியில் ஹைதர் அலி இதனை ஆண் டார். அவர் காலத்தில் இந்நகரின் கோட்டை புதுப் பிக்கப்பெற்றது. சீரங்கப்பட்டணக் கோட்டை இந்தி யாவிலுள்ள கோட்டைகளில் இரண்டாவதாக உள்ள தென்று இராணுவ அதிகாரி ஒருவர் கூறியுள்ளமை இதன் பெருமையை விளக்குவதாம்.

சிவசமுத்திரம்

சிவசமுத்திரம் என்பது சீரங்கப்பட்டணத்தைப் போன்றே ஒரு சிறு தீவாகும். இவ்வூர் பங்களூரிலிருந்து சீரங்கப்பட்டணம் செல்லும் பெருவழியில் உள்ளது. இப்பகுதி வறண்ட பிரதேசம்; பயிர் விளைவு இல்லை. ஆதலால் மக்கள் நடமாட்டம் மிகக் குறைவு. சிவசமுத்திரத்தில் இப்போது உள்ள நகரம் பதினாறும் நூற்றாண்டின் துவக்கத்தில் கங்கராஜர் காலத்தில் நிறுவப்பெற்றதென்று அறிஞர் கூறுகின்றனர். இந் நகரில் சீரங்கப்பட்டணத்தில் உள்ளது போன்ற அரங்கநாதர் ஆலயம் ஒன்று உள்ளது. இது மத்தியரங்கமெனப் போற்றப் பெறுகிறது. இவ்வாலயத்துக்குக் கோபுரம் அமையவில்லை. இப்பெருமானுக்கு 'ஜகன்மோகன ரங்கநாதர்' என்னும் திருநாமம் வழங்குகிறது. இங்கும் காவிரி அன்னை மாத்திரமே திருமாலின் திருவடிகளின் அருகில் வீற்றிருக்கிறாள். இங்குத் தக்ஷகன் திருமாலை வழிபட்டதாகக் கூறுவர். இவ் வாலயத்திலுள்ள நவரங்கத்தில் அரவுடலும் மனிதத் தலையும் கொண்ட தக்ஷகனது உருவம் காணப்படுகிறது. அரங்கநாதர் ஆலயத்தைத் தவிர இவ்வூரில் சோமேசுவரர் கோயிலும் வீரபத்திரர் கோயிலும் காணப்படுகின்றன. சோமேசுவரர் கோயில் கருப்பக்கிருகத்தின் அடிப்பாகத்தில் முப்பதுக்கு மேற்பட்ட கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. சிவசமுத்திரத்திற்கு மேற்கே ஒரு குன்று உள்ளது. அதற்குப் 'பிரேதன பெட்டா' என்பது பெயர். இராமபிரான், இறந்த தம் தந்தையார்க்கு அக்குன்றில் ஈமக்கடன் புரிந்தனன் என்பது செவிவழிச் செய்தியாகும்.

தாலக்காடு

தாலக்காடு மிகப் பழமையான ஊர். இவ்வூரைப் பற்றி வழங்கும் பழைய வரலாறென்று மிகவும் சுவையானது. நீண்டகாலத்திற்குமுன் **தாலன், காடன்** என்ற வேட்டுவச் சகோதரர் இருவர் வாழ்ந் தனர். அவர்கள் ஒரு சமயம் காட்டில் சில யானைகள் ஒருமரத்தை நாள்தோறும் தொழுதுவருவதைக் கண்டனர். அவர்கள் பெருவியப்புடன் அம்மரத்தை வெட்டிப் பார்த்தனர்; அப்போது அம்மரத்தடியில் இருந்த இலிங்கத்தைக் கண்டு திகைத்து நின்றனர். அவர்கள் வெட்டுகையில் ஈசன் உடலில் காயம்பட இரத்தம் பெருகியதாம். அதுகண்டு உளம் துடித்த அவர்களை நோக்கி இறைவனே காட்டிலுள்ள சில தழைகளைக் கொண்டுவந்து காயத்தில் கட்டுமாறு பணித்தனர். அவ்வேடர்கள் அவ்வாறே செய்தனர். அதனால் இரத்தப் பெருக்கு நின்று நோயும் நீங்கியது கண்டு மகிழ்ந்தனர். இவ்வாறு தமக்கு மருத்துவன் தாமேயாகி விளங்கிய காரணத்தால் அவ்விறைவ னுக்கு **வைத்தியேசுவரர்** எனப் பெயர் வழங்கியது. இறைவன் யானைகளாயிருந்த முனிவர்க்கும் வேடு வர்களுக்கும் முத்தியளித்தனர். அதுமுதல் அவ் வேடுவர் இருவர் பெயரால் இவ்வூர் தாலக்காடு என வழங்கிவரலாயிற்று என்பதே அவ்வரலாறு. இவ் வூரே பின்னர்த் தலைக்காடு என்றும் தழைக்காடு என்றும் வழங்கப்பெற்றது. இவ்வூர் முதலில் கங்க அரசர்கள் வசம் இருந்தது. அதனால் இப்பகுதி **கங்கபாடி** என வழங்கப்பட்டது. தாலக்காடு அதன் தலைநகரமாக விளங்கியது. கி. பி. ஒன்பதாம் நூற் றாண்டின் இறுதியில் ஆண்ட இராஜராஜ சோழன் கங்கர்களை வென்று கங்கபாடியைத் தன் வசப்படுத்தி

ஞன். அவன் தாலக்காட்டிற்கு இராஜராஜபுரம் என்று தன் பெயர் வழங்கினான்.

இந்நகரம் பாழ்பட்ட காரணம்

அதற்குப் பிறகு திருமலைராயர் என்ற அரசர் விஜயநகரப் பேரரசுக்கு உட்பட்டுச் சீரங்கப்பட்டணத்தில் இருந்து இப்பகுதியை ஆண்டுவந்தார். அவர் நோயுற்றிருந்த காரணத்தால் தலைக்காட்டில் எழுந்தருளியுள்ள இறைவனை வழிபட வந்தார். அவர் மனைவியும் உடன் வந்திருந்தனர். அவ்வம்மையாரிடம் விலையுயர்ந்த மூக்கணி இருந்ததை அறிந்த மைசூர் அரசர் அதனைக் கைப்பற்றத் தலைக்காட்டை முற்றுகையிட்டனர். திருமலைராயர் உடல்நிலை கேடுற்றிருந்தபோதிலும் வீரத்துடன் போர் புரிந்து மாண்டார். அவர் மனைவியார் மூக்கணியுடன் காவிரியில் வீழ்ந்து உயிர் துறந்தார். அவ்வம்மையார் இறக்கும் போது மைசூர் அரசர் சந்ததி இன்றிப்போக வேண்டுமெனவும், தலைக்காடு மண்ணாக வேண்டுமெனவும் சாபங்களிட்டனர். அவை பலித்துவிட்டன. இன்று தாலக்காடு முற்றிலும் மணலால் மூடப்பட்டுள்ளது. ஒரு கல் நீளம் மணற் குன்றுகளே காணப்படுகின்றன. அவற்றின் அடியில் முப்பதுக்குக் குறையாத கோயில்கள் ஆழ்ந்திருக்கின்றன என்று அறிஞர் கூறுகின்றனர். இப்போது இவ்வூரிலுள்ள கீர்த்தி நாராயணன் கோயிலைச் சூழ்ந்திருந்த மணலை மக்கள் பெருமுயற்சியுடன் அப்புறப்படுத்தி வழி ஏற்படுத்தியுள்ளார்கள். அம்மணல் மேலும் நகரை அழிக்காதவாறு பல முயற்சிகள் கையாளப் பட்டுவருகின்றன.

வைத்தியேசுவரர் ஆலயம்

இவ்வூரில் வைத்தியேசுவரர் ஆலயம் மிகவும் சிறப்புடையது. இங்குப் பத்தடி உயரமுள்ள துவார பாலகர் உருவங்கள் காணப்படுகின்றன. இங்கும் நவரங்கம் ஒன்று உள்ளது. அதன் மேற்கூரையில் சிவலீலைகள் செதுக்கப்பட்டுள்ளன. மக்கள் நவ ரங்கத்தை நாற்புறமும் தடுத்து இறைவனை எழுந் தருளச் செய்துள்ளனர். மற்றைய பகுதிகள் மண லுள் மூழ்கியுள்ளன. இக்கோயிலிலும் சிதைந்த தமிழ்க் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன.

இக் கோயிலே அன்றிப் பாடலேசுவரர், மரகதேசு வரர், ஆனந்தேசுவரர், கௌரி சங்கரர் ஆலயங்களும் அண்மையில் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இங் குள்ள வீரபத்திரர் கோயிலின் முன்பு தாலன் காடன் ஆகிய வேடுவர் உருவங்கள் வில்லும் அம்பும் கொண்டு ஒன்றன்பின் ஒன்ருகக் கைகட்டி நிற் பதைக் காணலாம்.

உறையூர்

காவிரியின் போக்கில் தமிழ் நாட்டில் சிறந்து விளங்கும் நகரங்களில் மிக்க பழமையும், பெருமை யும், வரலாற்றுச் சிறப்பும் உடையது உறையூராகும். இது திரிசிராப்பள்ளிக்கு அண்மையில் காவிரி நதி யின் தென்கரையில் உள்ளது. இப்போது இஃது ஒரு சிற்றூராகக் காட்சியளிக்கிறது. பண்டு இதுவே மிகப் பெரியதாய்ச் சோழர்களின் பழமையான தலை நகரமாய்த் திகழ்ந்தது. உறையூர் என்பதற்கு மக்கள் விரும்பி வசிப்பதற்கு ஏற்ற ஊர் என்பது பொருள். உறையூர் மக்கள் வாழ்க்கைக்கு வேண்டிய நலங்கள் யாவற்றையும் ஒருங்கு பெற்று விளங்கியது.

அதனுல் ஊர் என்ற பெயரே உறையூரைக் குறிப்ப தாயிற்று. 'ஊரெனப்படுவது உறையூர்', என்று ஆன்றேர் கூறியிருத்தல் அறிக. உறையூர் என்ற பெயர் உறந்தை எனவும் மருவி வழங்கியது. கோழி நகர் எனவும் இதற்கு ஒரு பெயர் உண்டு. இப்பெயர் ஒரு வீர நிகழ்ச்சியை அடிப்படையாகக் கொண்டு ஏற்பட்டதாம் : பண்டொரு காலத்தில் ஒரு கோழியானது யானை ஒன்றுடன் போரிட்டு வென்ற இடம் ஆதலால் சோழர் இங்குத் தலைநகரை அமைத்து, 'கோழியூர்' என்று இதற்குப் பெயர் வழங்கியதாகச் சிலப்பதிகாரம் கூறுகிறது.

உறையூரின் சிறப்பியல்புகள்

இங்ஙனம் பெருமையுற்று விளங்கிய உறையூர் சங்க காலத்தில் மிகச் சிறந்த நிலையில் விளங்கியிருக் கிறது. அதுவே தலைநகராகத் திகழ்ந்த காரணத் தால் பல அறநிலயங்களும் நீதிமன்றங்களும் அங்கு நிலைபெற்று விளங்கின.

> 'அறங்கெழு சோழர் உறந்தை அவையத்து
> அறம் நின்று நிலையிற்று'

என்று புறநானூற்றில் உறையூரில் இருந்த நீதி மன்றங்களையும், அந்நீதி மன்றங்களில் அறம் நிலை பெற்ற சிறப்பையும் பாராட்டிக் கூறியுள்ளமை அறிக. 'அறந்துஞ்சு உறந்தை,' என்றும் காவிரிப்பூம் பட்டினத்துக் காரிக்கண்ணனுர் இதனைப் புகழ்ந் தனர். இங்ஙனம் பழம் புகழ் வாய்ந்த உறையூர் இன்று திரிசிராப்பள்ளியின் அருகில் சிறந்து விளங்குகிறது. நகராண்மைக் கழகத்தின் அலுவ லகங்கள் இன்றும் இவ்வூரிலேயே அமைந்துள்ளன. உறையூரில் பற்பல தொழில்கள் வளர்ந்துவரு

கின்றன. அவற்றுள் நெசவுத்தொழில் குறிப்பிடத் தக்கதாகும்.

திரிசிராப்பள்ளி

திரிசிராப்பள்ளி என்னும் பெயரை இந்நகர் பெற்றமைக்குக் காரணங்கள் பல உள: இவ்வூரில் திரிசிரஸ் என்ற அரக்கன் ஆண்டவனைத் தொழுது வழிபட்டமையால் இவ்வூர் இப்பெயர் பெற்றதெனச்



திரிசிராப்பள்ளியில் காவிரிப்பாலம்

சிலர் கூறுவர். இவ்வூரின் நடுவில் அழகு பெற ஒரு கற்பாறை வானுற ஓங்கியுள்ளமை பற்றி ஏற்பட்ட திருசிலாப்பள்ளி என்ற பெயரே இங்ஙனம் மருவியது எனச் சிலர் கருதுகின்றனர். இது முதலில் சிறிய ஊராய் இருந்தமைபற்றி, சின்னப்பள்ளி எனப் பெயர்

பெற்று, அதுவே நாளடைவில் திருச்சின்னப்பள்ளி, திருச்சிராப்பள்ளி என்று ஆயிற்று என்பது ஒரு சிலர் கருத்தாம். மற்றும் சிலர் இங்குச் சைனர்கள் மிகுந்திருந்த காரணத்தால் இவ்வூர் திருசினப்பள்ளி என்று பெயர் பெற்று, அதுவே திருச்சினுப்பள்ளி என்ருயிற்று எனக் கருதுவர். பெயர்க் காரணம் எதுவாயினும், இது மிகப் பழமையான ஊர் என்பது மறுக்கக்கூடாத உண்மையாம்.

திரிசிராப்பள்ளியின் சிறப்பியல்புகள்

திரிசிராப்பள்ளி இன்று சென்னை இராச்சியத்தில் மூன்ரும் பெருநகராய்த் திகழ்கிறது. நகரின் நடுவில் முழுவதும் பாறையாலாகிய குன்று மிகுந்த வனப்புடன் விளங்குகிறது. காலையும் மாலையும் கதிரவன் ஒளியில் இம் மலையைக் காண்போர், ‘இது பொன்மலை!’ எனவே இயம்புவர். இதில் தாயுமானவர் ஆலயம் ஓவியக்கலையின் உறைவிடமென மிளிர்கிறது. பாறையின் முகட்டில் அமைந்துள்ள உச்சிப்பிள்ளையார் கோயில் மிகவும் புகழ் வாய்ந்தது. இவ்வூரில் சிறந்ததொரு மின்சார நிலயம் அமைந்துள்ளது. அது பலவிடங்களுக்கும் மின்சாரத்தை வழங்கிவருகிறது. மற்றும் அருகிலுள்ள பொன்மலையென்னும் இடத்தில் தென் இந்திய இரயில் பாதையைச் சார்ந்த சிறந்ததொரு தொழிற்சாலை உள்ளது. இதில் ஆயிரக்கணக்கான மக்கள் தொழில் புரிகின்றனர். இவ்வூர் இன்று செல்வத்திலும் சிறப்பிலும் ஒப்புயர்வற்று விளங்குவது இதன் பழம் பெருமையையே காட்டுவதாகும்.

சீரங்கம்

திரிசிராப்பள்ளிக்கு அருகில் உள்ளது சீரங்கம் என்னும் சிறந்த வைணவத்தலம். இத்தலம் வைணவ சமயத்துக்கே இருதயமாக விளங்குகிறது. அரங்கத்தில் உள்ள கோயில் மிகுந்த அழகினையுடையது; மிகவும் பெரியது. 'திருவரங்கம் பெரிய கோயில்' என்றே அது வழங்கப்படும். இங்குத் தெய்வக் காவிரி இரண்டாகப் பிரிந்து தன் குளிர்நீர் கொண்டு இறைவன் பாதமலர்களைப் புனலாட்டி வழிபாடு செய்வது இத்தலத்தின் பெருமையை மேலும் மிகுவிக்கிறது என்னலாம். இத்தலத்தைப் புகழ்ந்து பாடிய புலவர்கள் யாவரும் இறைவன் திருப்புகழுடன் பொன்னியின் புகழையும் சேர்த்தே புகழ்ந்துள்ளனர்.

“கங்கையிற் புனித மாய காவிரி நடுவு பாட்டுப்
பொங்குநீர் பரந்து பாயும் பூம்பொழில் அரங்கந் தன்னுள்
எங்கள்மால் இறைவன் ஈசன் கிடந்ததோர் கிடக்கை கண்டும்
எங்ஙனம் மறந்து வாழ்கேன் ஏழையேன் ஏழை யேனே”

என்று தொண்டரடிப்பொடியாழ்வார் பொன்னியின் நடுவில் புயல்வண்ணன் கிடந்த திருக்கோலத்தில் இருக்கும் மறப்பரிய அழகுக் காட்சியில் ஈடுபட்டு அகங்குழைந்து பாடியுள்ளமை உள்ளத்தை உருக்குவதாகும். சிலப்பதிகாரத்திலும், காவிரித் திருநதிக்கிடையில் நீலமேகம் நெடும்பொற் குன்றத்துப் படிந்திருப்பதுபோல், நீலவண்ணன் ஆயிரம் தலைகளையுடைய பொன்னிற அனந்தன்மேல் கண்வளர்கின்ற காட்சியை அழகுறச் சித்திரித்துக் காட்டுகிறார் இளங்கோவடிகள். இவ்வாறு இந்நகர் காவிரித் தாயின் கருணையால் மிகப் பழங்காலம் முதலே மக்கள் உள்ளத்தைக் கவர்ந்து ஒப்புயர்வற்ற பகுதியாய்த் திகழ்ந்துவந்திருக்கிறது.

இத்தலம் தென்னிந்தியாவிலுள்ள தலங்கள் எல்லாவற்றையும்விட அமைப்பில் மிக அழகியது. இங்குள்ள கோயிலைச் சுற்றி ஏழு உயரமான மதிற் சுவர்கள் உள்ளன. நடுவில் அரங்கநாதர் பள்ளி கொண்டுள்ளார். வெளிப்புற மதில்களுக்கிடையே மூன்று தெருக்கள் சுற்றிலும் அமைந்துள்ளன. கோபுர வாயில்கள் மிகப் பெரியவை. இக்கோயிலில் உள்ள சிறந்த சிற்பவேலைப்பாடுகள் தமிழர்தம் கலைத் திறனைப் புலப்படுத்துவனவாம்.

திருவானைக்கா

வைணவத்தை மட்டுமா வளர்க்கிறது காவிரி! சைவத்தையும் சேர்த்து வளர்த்துச் சமய சமரசத்தை நமக்கு அறிவுறுத்துகிறது. அந்த ஆற்றிடைக்குறை யிலேயே அரங்கத்திற்கு அண்மையில் திருவானைக்கா என்னும் பாடல் பெற்ற மிகப் பழமையான தலம் உள்ளது. இத் தலத்தைப் பற்றியும் பழமையான வரலாறு ஒன்று வழங்கப்பட்டுவருகிறது. இத் தலத்தில் நாவல் மரத்தின்கீழ் எழுந்தருளியிருந்த இறைவனை யானையொன்று நாள்தோறும் காவிரியில் நீராடித் துதிக்கையால் காவிரியின் குளிர்புனலைக் கொண்டுவந்து முழுக்காட்டி வழிபாடு செய்து வந்தது. அவ்விறைவனைச் சிலந்தி ஒன்றும் வழி பட்டு வாழ்ந்தது. அது மரத்திலிருந்து காய்ந்த சருகுகள் இறைவன்மீது உதிராதவாறு தன் மெல்லிய நூலால் குடைபோற் பின்னிக் காத்து வந்தது. ஒருநாள் யானை இறைவனுக்கு நீராட் டும்போது அச் சிலந்திவலை சிதைந்தது. அது கண்டு பதைத்த சிலந்தி மறுபடியும் முயன்று அக் கூட்டினைச் சமைத்தது. மறுபடியும் அதற்கு அக்

கதியே நேர்ந்தது. அதனால் சினங்கொண்ட சிலந்தி யானையின் துதிக்கைத் துவாரத்துள் புகுந்து கடித்தது. வலி தாங்கமுடியாத வேழம் துதிக்கையைத் தரையில் பலங்கொண்ட மட்டும் மோதி மோதி அடித்து இறந்தது. அவ்வடி தாங்கமுடியாமல் சிலந்தியும் இறந்தது. இவ்வாறு தன் பக்தி காரணமாக உயிர்விட்ட யானைக்கு இறைவன் நற்கதியருளினன். யானையால் வழிபாடு செய்யப்பெற்றமையின் இவ்வூர் 'ஆனைக்கா' என்று பெயர் பெற்றது. 'ஜம்புகேசுவரம்' என்றும் இதற்கு மற்ருெரு பெயர் வழங்குகிறது.

இப்பதியின் பெருமை

இத்தலத்தில் இறைவன் ஐம்பெரும் பூதங்களில் நீர் வடிவமாக எழுந்தருளியுள்ளார் என்பது ஐதிகம். ஆதலால் இஃது 'அப்புத்தலம்' என்றும் கூறப்படும். இங்கு இறைவன் நீரினுள் மூழ்கி இருப்பதை இன்றும் காணலாம். சைவ சமயாசாரியர்கள் மூவரும் இத்தலத்தில் எழுந்தருளியுள்ள இறைவனை வழிபாடு செய்து தம் அருமைப் பதிகங்களில் புகழ்ந்து பாடியுள்ளனர். 'வசைபாடக் காளமேகம்' என்ற புகழ் பெற்ற காளமேகப் புலவர் வாழ்ந்த ஊரும் இதுவேயாகும்.

காவிரிப்பூம்பட்டினம்

காவிரியாற்றின் போக்கிலேயே மிகப்பெரிய நகரமாய்ப் பேரும் புகழும் உடையதாய் விளங்கியது இந் நகரமேயாம். இப்பேரூர் காவிரிநதி கடலொடு கலக்கும் சங்கமுகத்துறையில் பண்டு அமைந்து விளங்கியது. முற்காலத்தில் **காந்தமன்** என்னும் சோழ

வரசன் இந்நகரை ஆண்டுவந்தான். அம்மன்னன் சோழ நாட்டை வளப்படுத்தும்பொருட்டு ஓராற்றை அருளுமாறு அகத்தியரை வேண்டினன். அவர் தம் கரகத்திலிருந்து காவிரியைப் பாயுமாறு செய்தார். காவிரியும் காந்தமனது தலைநகரை அடைந்தது. அந்நகரின் காவல் தெய்வமாகிய சம்பாபதி தன் அடியிணைகளை வணங்கி நின்ற காவிரியை நோக்கி, 'உன் வரவு நல்வரவாகுக!' இனிச் சோழநாடு வளங் கொழிக்கும். இதுவரையில் என் பெயரால் வழங்கிய இந்நகரம் இன்று முதல், இந்நாட்டின் வளத்திற்குக் காரணமாகிய, உன் பெயரால் 'காவிரிப்பூம்பட்டினம் என்று வழங்குவதாகுக,' என்று வாழ்த்தியருளினள். இக்காரணத்தால் இந்நகரம் இப்பெயர் பெற்றது என மணிமேகலையிலுள்ள வரலாற்றால் விளங்குகிறது.

சோழர்தம் சிறந்த தலைநகரம்

கி. பி. முதல் நூற்றாண்டில் சோழநாட்டை ஆண்ட கரிகாற் சோழன் காலத்தில்தான் காவிரிப்பூம் பட்டினம் பெருஞ் சிறப்புற்றது. உறையூரைத் தலை நகராகக் கொண்டு ஆண்டுவந்த கரிகாலன் சோழ நாடு வளமுறவும் வாணிகம் செழிக்கவும் கடற்கரைப் பட்டினமே ஏற்ற தலைநகரமாம் எனக் கருதித் தன் தலைநகரை உறையூரிலிருந்து இங்கு மாற்றிக் கொண்டான். அவனே இதனைப் பேரூராக மாற்றி எல்லாவகை வளங்களும் காவலும் உடைய ஒப்புயர் வற்ற தலைநகரமாக அமைத்தான். புகழ்பெற்ற கிரேக்க யாத்திரிகரான தாலமி என்பார் இந்நகரை 'காபேரிஸ்' என்று குறித்துச் சிறப்பித்துள்ளார். காவிரிப்பூம்பட்டினத்திற்குப் 'புகார்' என்றும் ஒரு பெயர் வழங்கியது. இந்நகரின் வளத்தால் இங்கு

வாழ்வோர் இதனை விட்டு வேறு ஒரு பகுதியிற் புகார். ஆதலினாலேயே இந்நகர் இப்பெயர் பெற்றதுபோலும்!

துறைமுகப் பெருமை

முற்காலத்தில் இந்நகரம் சிறந்த துறைமுகமாக விளங்கியது. இத்துறைமுகத்தில் எப்போதும் பல நாட்டுக் கப்பல்கள் தங்கியிருக்குமாம். ஏற்றுமதி இறக்குமதி இரவு பகல் ஓயாமல் நடந்துகொண்டிருக்குமாம். அதனால் துறைமுகப் பகுதி இடைவிடாத ஆரவாரத்துடனேயே விளங்கியதாம். அத்துறைமுகத்தில் இக்காலத்து நாகரிகச் சின்னம் என்று கருதப்படும் கலங்கரை விளக்கம் பண்டே அமைந்து விளங்கித் தமிழரின் நுண்மாண்நுழைபுலத்தை உலகுக்கு அறிவித்துக்கொண்டு நின்றது. இன்று அதன் பெருமைகள் எல்லாம் எங்கோ மறைந்துவிட்டன. அந்நகர் இருந்த இடத்தில் ஒரு சிற்றூர் மட்டும் பழைய பெயரை நினைவூட்டிக் கொண்டு இருக்கிறது.

6. நாகரிகம்

நகர் என்னும் சொல்லிலிருந்தே நாகரிகம் என்னும் சொல் தோன்றியது. அஃது ஒரு நாட்டு மக்களின் அறிவு, ஆற்றல், மனப்பண்பு ஆகிய பண்பாடுகளையும், அவர்தம் நடை, உடை, பாவனைகளையும் ஒரு சேர விளக்கும் விழுமிய சொல்லாகும். நதிகளே நகரங்களுக்குக் காரணமாயினமையின் நகரங்களினின்று தோன்றிய நாகரிகம் நதிகளால் தோற்றுவிக்கப்பட்டது என்றே கொள்ளல் தகும்.

அவ்வகையில் தமிழர் நாகரிகத்துக்குக் காவிரியாறு புரிந்துள்ள தொண்டுகள் கணக்கிலடங்கா. சோழர் காலத்தில் காவிரிக்கரையில் தோன்றி வளர்ந்த நாகரிகமே ஒப்புயர்வற்ற பெருமையுடையதாய்த் திகழ்ந்தது. எனவே காவிரிக் கரையில் நிலைபெற்றிருந்த சோழப் பேரரசின் அரசியல், தொழில்வளம், வாணிகம், இலக்கியம், கலைத்திறம், சமயம் ஆகிய நாகரிகப் பண்புகளைப் பற்றி ஆராய்வோம்.

அரசன் நிலை

பண்டைக் காலத்தில் முடியாட்சி முறையே நிலவி இருந்தது. அரசர்கள் பரம்பரையாக நாட்டை ஆண்டனர். அரசனை மக்கள் கடவுளின் அம்சம் உடையவனாகப் போற்றினர். எனினும் அரசன் தான் குடிமக்களுள் ஒருவன் என்றே கருதி வாழ்ந்தான்; தன்னால் நியமனம் பெற்றவரும் குடிமக்களுடைய பிரதிநிதிகளும் கொண்ட ஐம் பெருங்குழு, எண்பேராயம் போன்ற சபைகளின் ஆலோசனைகளைக் கேட்டு அரசு புரிந்துவந்தான். இதனால் அக்காலத்திலேயே குடியாட்சியின் சிறந்த அம்சங்கள் ஆட்சி முறையில் அமைந்திருந்தன எனக் கூறலாம்.

நாட்டின் பிரிவுகள்

அக்காலத்தில் நாடு மண்டலம், வளநாடு, கோட்டம், கூற்றம், ஊர் எனப் பிரிக்கப்பட்டிருந்தது. இவற்றுள் சிறு பகுதிகளாகிய ஊர்களே சோழர் ஆட்சியின் உயிர் நாடிகளாம். தனி ஊர்களின் ஆட்சிப் பொறுப்பைத் தேர்ந்தெடுக்கப் பெற்ற குழுவினரே நடத்திவந்தனர். அரசன் ஊராட்சியை நன்கு மேற்பார்வையிட்டுவந்தான். இக்காலத்தில்

குடியாட்சி முறையின் சிறந்த அம்சமாகக் கருதப் படும் தேர்தல் முறை, ‘ குடவோலை ’ என வழங்கப் பட்டு மிகச் சிறந்திருந்தது.

அரசியல்

அரசியல் நன்கு நடைபெறுவதற்கு அரசன் குடிமக்களிடமிருந்து அவர்களை வருத்தாமல் வரி களைக் கொண்டான். நிலவரியே முக்கியமான வரியாக இருந்தது. நிலங்கள் மிகவும் நுட்பமாக அளக்கப்பெற்றன. நிலவரியைத் தவிரத் தண்ணீர் வரி, திருமண வரி, தொழில் வரி, சுங்க வரி முதலியன வும் அக்காலத்தில் இருந்தன. வரியை நெல்லாகவும், பொன்னும் காசுமாகவும் செலுத்தும் வழக்கம் இருந்தது. உழவுத் தொழிலை வளப்படுத்தும் பொருட்டு அரசர்கள் காவிரிக்கரைகளை அவ்வப் பொழுது சீர்திருத்தியமைத்தனர். இதற்காக மூன்ரும் குலோத்துங்கன் என்னும் மன்னன் ‘ காவிரிக் கரை விநியோகம் ’ என்னும் வரியை விதித்ததாகத் திருப்பாம்புரம் கல்வெட்டிலிருந்து அறிகிரோம். இங்ஙனம் பெற்ற வரிப்பொருளை அரசன் நாட்டின் சுகாதாரம், கல்வி, கலைகள், வாணிகம் ஆகியவற்றை வளர்ப்பதில் செலவிட்டான்.

நீதி வழங்கும் முறை

காவிரிக்கரை நாகரிகத்தில் நீதி வழங்கும் முறை மிக்க சிறப்புற்றிருந்தது. சாதாரண குற்றங்களை ஊர்ச்சபையினரே விசாரித்துத் தீர்ப்புக் கூறுவர். பெரிய குற்றங்களாயின் நீதிமன்றத்தில் நீதிபதிகள் தீர்ப்புக் கூறுவர். அத்தகைய நீதிமன்றங்கள் உறந்தையிலும் காவிரிப்பூம்பட்டினத்திலும் மற்றும்

பல பெரிய நகரங்களிலும் இருந்தன. நீதிமன்றங்களாலும் தீர்த்துவைக்க முடியாத வழக்குகளை அரசனே நேரில் விசாரித்துத் தீர்ப்புக் கூறுவான். குற்றங்களுக்கேற்பத் தண்டனைகள் விதிக்கப்பட்டன. மரணதண்டனையும், பொருள் பறித்தலும் கடுந் தண்டனைகளாகக் கருதப்பட்டன. மக்கள் எச் சமயத்திலும் அரசனைக் கண்டு தங்கள் குறைகளை முறையிடலாம். சிபி, மனுநீதிச் சோழன் என்ற மன்னர்தம் வரலாறுகள் சோழராட்சியின் நீதி முறைக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும்.

கல்வியை வளர்த்தமை

நாட்டுக்குப் பொதுவான நல்ல காரியங்களை அரசாங்கமே ஏற்று நடத்திவந்தது. கல்வியே ஒரு நாட்டு நாகரிக வளர்ச்சிக்கு ஊற்றிடம். ஆகையால் கல்விச்சாலைகளை அமைப்பதில் சோழப் பேரரசர்கள் கண்ணும் கருத்துமாக இருந்தார்கள். சோழர்கள் காலத்தில் கிராமங்கள்தோறும் கிராமப் பள்ளிக் கூடங்கள் இருந்தன. பல கல்லூரிகளும் இருந்தன. மற்றும் கோயில்களும் கோயில்களை அடுத்த மடங்களும் பண்டு கல்வி நிலயங்களாகவே விளங்கின. இவை தவிர, காவிரிப்பூம்பட்டினத்தில் அறிவை வளர்க்கும் பல சொற்பொழிவு மண்டபங்களும் பட்டி மண்டபங்களும் இருந்தன என்பது தெரிகிறது.

தொழில்

ஒரு நாட்டின் அரசியல் சிறப்பு அந்நாட்டின் தொழில் வளத்தைப் பொறுத்திருக்கிறது. தொழில்கள் பலவேனும், உழவும் நெசவும் நாகரிகப் பண்பிற்கு இரு கண்கள் என்று கூறும் பெருமையுடையனவாம்.

உணவளித்து உடலை வளர்ப்பது உழவு; மானத்தைக் காத்து மதிப்பைத் தருவது நெசவு. அவ்விரண்டு தொழில்களும் காவிரிக்கரை நாட்டில் மிகச் சிறந்து விளங்கின. உழவுத் தொழிலையே சோழ நாட்டின் உயர்ந்த தொழிலாகப் பெரும்பாலான மக்கள் பண்டு முதல் இன்றளவும் மேற்கொண்டு வாழ்ந்து வருகின்றனர். 'தென்னிந்தியாவின் நெற்களஞ் சியம்' என்று சோழ வளநாடு பாராட்டப்பட்டு வருகிறது. பிற நாடுகளில் ஏரிகளிலிருந்தும், கிணறுகளிலிருந்தும் ஏற்றத்தினுல் நீர் இறைத்து உழவர் நெல் விளைப்பர். இவ்விளைவு சோழ நாட்டில் அறுவடை செய்யும்போது உதிர்ந்து போகும் நெல்லுக்கும் ஈடாகாது என்ற கருத்துடைய பழம் பாடல் காவிரி நாட்டின் உழவுச் சிறப்பை உணர்த்தும். உழவுத் தொழிலைப்போல் நெசவுத் தொழிலும் சோழ நாட்டில் உலகம் போற்றக்கூடிய வகையில் வளமுற்றிருந்தது. பட்டினும் பருத்தி யினும் பலவகை வேலைப்பாடுகள் அமைந்த ஆடைகள் நெசவு செய்யப்பெற்றன. அக்காலத்து ஆடை களுக்கு 'மாலைப்பனி,' 'ஓடுநீர்,' 'பூங்காற்று,' 'பாலாவி' என்பன பெயர்களாக வழங்கப்பெற்று வந்தன. இப்பெயர்கள் அவ்வாடைகளின் மென்மை யையும் நுண்ணிய வேலைப்பாட்டையும் புலப்படுத்து வனவாம். கம்பள ஆடைகள் நெய்வதும் முற்காலத் தில் சிறப்புற்றிருந்தது.

வாணிகம்

காவிரி நாட்டில் வாணிகம் பண்டமாற்று முறையி லேயே பெரும்பாலும் நடைபெற்றது. 'சாத்து' என்ற வணிகக் குழுவினர் மக்களுக்கு இன்றி

யமையாத பொருள்களையெல்லாம் பொதிமாடுகளின் மீது ஏற்றி ஊரூராகச் சென்று வாணிகஞ் செய்து வந்தனர். அரசாங்கத்தார் அவர்க்கு வேண்டிய வசதிகளும் பாதுகாப்பும் அளித்துவந்தனர். காவிரி நாட்டின் அயல்நாட்டு வாணிகத்தை வளப் படுத்துவதற்காகவே கரிகாலன் காவிரிப்பூம்பட்டினம் என்னும் சிறந்த துறைமுக நகரத்தைத் தலைநகராகக் கொண்டான். காவிரிக் கரைகளில் விளைந்த மூலப் பொருள்களும், செய்பொருள்களும் கடல்கடந்து காழகம் (பர்மா), ஈழம் (இலங்கை), சுமத்திரா, ஜாவா, சீனம், உரோமாபுரி போன்ற இடங்களுக் கெல்லாம் அனுப்பப்பெற்றன. சிறப்பாக யவன தேசத்திற்கும் காவிரி நாட்டிற்கும் நெருங்கிய தொடர்பு இருந்ததென்பது தெரிகிறது. நம் நாட்டில் பல பகுதிகளில் யவன நாட்டில் வழங்கிய பொற் காசுகள் கிடைத்துள்ளமையால் இது விளங்கும்.

இலக்கியம்

இலக்கியம் என்பது ஒரு நாட்டு மக்களின் திருந்திய வாழ்க்கை, பண்பாடு, நாகரிகம் முதலிய வைகளைத் தன்னுள் கொண்டு காட்டும் கண்ணுடி யாகும். முற்காலத்தில் சோழ மன்னர்கள் புலவர் களுக்கு வேண்டிய பொருள்களைத் தந்து ஆதரிக்கவே, அவர்தம் இன்பவாழ்க்கையின் காரணமாய்ப் பல இலக்கியங்கள் தோன்றலாயின. சங்க இலக்கியங் களில் உள்ள பாடல்களும் சிலப்பதிகாரம் மணி மேகலை என்னும் நூல்களும் காவிரி நாட்டின் சிறப்பை நன்கு உணர்த்துகின்றன. குலோத்துங்கன் காலத்தில்தான் தம் கவிப் பெருமையால் தமிழுக்குத் தனிப் பெரும்புகழைத் தேடித் தந்த கவிச்சக்கர

வர்த்தி கம்பர் வாழ்ந்தார். அவனது வேண்டு கோளின்படி இயற்றப்பெற்ற ஒப்பற்ற நூலே கம்ப ராமாயணமாகும். அவனது கலிங்க நாட்டு வெற்றி யைச் சிறப்பிக்கும் நூல் சயங்கொண்டார் பாடிய கலிங்கத்துப் பரணியாம். அநபாயன் என்று புகழ் பெற்ற இரண்டாம் குலோத்துங்கன் வேண்டு கோளால், அருள் கொழிக்கும் சைவத் திருத் தொண்டர்தம் வரலாற்றைத் தம் பொருள் கொழிக்கும் புனிதத் தமிழால் சேக்கிழார் நாயனுர் பாடியருளினர். இவ்வரசனுக்கு ஆசிரியராய்த் திகழ்ந்த ஒட்டக் கூத்தர் சோழவரசர்கள்மீது உலாக்கள் பாடியுள்ளார். முற்றத் துறந்த பெருவணிகராம் பட்டினத்தார் பாமரரும் அறிந்தின்புறக் கூடியவாறு பரம்பொருளின் உண்மைகளைத் தெளிவுறக் கூறும் பல பாடல்களைப் பாடினர்.

புதுமுறை இலக்கியங்கள்

சோழ அரசர்களுக்குப் பிறகு சோழ நாட்டில் திகழ்ந்த பெருஞ் செல்வர்களும், மடாதிபதிகளும் தமிழையும் இலக்கியத்தையும் போற்றி வளர்த்து வந்துள்ளனர். தருமபுர ஆதீனப் புலவராக இருந்த திரிசிரபுரம் மகாவித்துவான் மீனுட்சிசுந்தரம் பிள்ளை யவர்கள் பதினுயிரக்கணக்கான பாடல்களைப் பாடித் தமிழ் இலக்கிய வளத்துக்கு அருஞ்சேவை செய் துள்ளார். அவர் காலத்தில் வாழ்ந்த மாயூரம் வேதநாயகம்பிள்ளை அவர்கள் நாவல் என்னும் நவீன நூல்வகையைத் தமிழில் புகுத்தித் தமிழ் உரை நடை வளத்துக்கு உதவி செய்தார். மீனுட்சிசுந்தரம் பிள்ளை அவர்களின் மாணவரும் சோழநாட்டில் உத்தமதானபுரத்தில் பிறந்தவருமான டாக்டர்

உ. வே. சுவாமிநாத ஐயர் அவர்கள் மறைந்து கிடந்த நம் இலக்கியச் செல்வங்களையெல்லாம் முயன்று கண்டறிந்து வெளியிட்டுத் தமிழரின் உயர்ந்த பண்பாட்டை விளக்கியுள்ளார். மற்றும் அண்மையில் வாழ்ந்த மறைமலையடிகள், வேங்கட சாமி நாட்டார் போன்ற தமிழ்ப் பெரும்புலவர்கள் எண்ணற்ற தமிழ் நூல்களை எழுதியும் தமிழ் நடையைச் செப்பனிட்டும் பற்பல தொண்டுகளைத் தமிழன்னைக்கு ஆற்றியுள்ளனர். இன்றும் கரந்தை, திருவையாறு, தருமபுரம் முதலிய சோழநாட்டுப் பதிகளில் உள்ள கல்லூரிகள் தமிழிலும் வடமொழியிலும் வல்ல புலவர்கள் பலரைத் தோற்றுவித்து இலக்கிய வளர்ச்சிக்குப் பேருதவி புரிகின்றன. தஞ்சையிலுள்ள சரசுவதி மஹால் என்னும் சிறந்த நூல்நிலயம் வடமொழி தென்மொழி இலக்கியங்களின் கருவூலமாகத் திகழ்கிறது. இங்ஙனம் பண்டு முதல் இன்றளவும் காவிரி தான் பாயும் பகுதிகளில் வழங்கும் மொழிகளில் இலக்கியங்களைப் போற்றிக் காத்துவருகிறது.

கலைகள்

கலை என்பது ஒரு நாட்டின் பண்பாடு, நாகரிகம் ஆகியவை மக்கள் உள்ளத்தில் முதிர்ந்து பெருகியமையால் வெளிப்படும் உணர்ச்சி அலைகளின் வடிவமாகும். கலைகள் நிறைந்த நாடே நாகரிகத்தில் நனி சிறந்ததாகி ஏனைய நாடுகளுக்கும் நல்வாழ்வினை விளக்கும் கலங்கரை விளக்கமாம். முன்பு சோழ நாட்டில் இசை, நாடகம், நடனம், சிற்பம், ஓவியம் முதலிய பற்பல கலைகளையும் மன்னர்கள் கண்ணேபோல் காத்தனர். இசையே இயலுக்கும்

நாடகத்துக்கும் அடிப்படையாய் அமைந்திருந்தது. இசை பாடுவதையே தம் வாழ்க்கைப் பயனுகக் கருதிய பாணர் பலர் மன்னர்களால் ஆதரிக்கப் பெற்றனர். யாழ், குழல், முழவு போன்ற இசைக் கருவிகள் அக் காலத்தில் சிறப்புற்றிருந்தன. கருநாடக இசையின் மும்மணிகள் என வழங்கும் தியாகராஜர், முத்துசாமி தீக்ஷிதர், சாமா சாஸ்திரிகள் ஆகியோர் வாழ்க்கை காவிரிக்கரையிலேயே அமைந்திருந்தது. இவர்கள் வரையறுத்த இசை நுட்பங்கள் உலகில் எங்கும் காண இயலாத பெருமை வாய்ந்தனவாம். மற்றும் சோழ நாட்டில் நாடகக் கலை சிறப்புற்றிருந்ததென்பதை இன்றும் கிராமங்கள் தோறும் நடைபெறும் நாடகங்களின் வாயிலாக அறிந்துகொள்ளலாம். சிதம்பரத்தில் அம்பலத் தாடுவோனே நடனக்கலையின் சிறப்பை உணர்த்தி நிற்கின்ருன். காவிரியின் கரைகளில் அமைந்துள்ள நூற்றுக் கணக்கான கோயில்கள் அக்காலத்தில் சிற்பக்கலையும், ஓவியக்கலையும் பெற்றிருந்த உயர் நிலையை உலகினுக்கு உணர்த்தி நிற்கின்றன. தஞ்சைப் பெரிய கோயில் இவற்றிற்குத் தக்க எடுத்துக் காட்டாகத் திகழ்கிறது. இவையன்றிச் சோழ நாட்டில் போர்க்கலை, மருத்துவக்கலை, சோதிடக்கலை முதலியனவும் நன்கு போற்றப் பெற்றன.

சமயம்

சோழநாட்டில் எங்கு நோக்கினும் கோயில்களும் கோபுரங்களும் காட்சியளிக்கக் காணலாம். பாடல் பெற்ற சிவத்தலங்கள் வைணவத்தலங்களிற் பெரும்பாலன சோழநாட்டில் உள்ளனவே.

சிறப்பாகச் சோழர் காலத்தில் சைவமும் வைணவமும் இரு கண்களெனப் போற்றி வளர்க்கப்பட்டன.

சமயத்தை வளர்த்த பெரியோர்கள்

சைவ சமய ஆசாரியர்களாகிய ஞான சம்பந்தரும் சுந்தரரும் சோழ நாட்டில் தோன்றியவர்களே. வைணவத்தில் சிறந்து விளங்கிய திருமங்கையாழ்வார், திருப்பாணாழ்வார் என்பவர்களும் சோழ நாட்டில் அவதரித்தவர்களே. மற்றும் அளவிறந்த சைவ வைணவத் தொண்டர்கள் சோழ நாட்டைத் தெய்வ மணம் கமழும் நாடாகச் செய்துள்ளனர்.

மக்கள் நிலை

சோழர் ஆட்சியில் மக்கள் ஒழுக்கத்திற் சிறந்து விளங்கினர். கொலை, களவு முதலிய குற்றங்கள் தலை காட்டாது ஒழிந்தன. மன்னர்கள் கடவுட் பக்தியில் சிறப்புற்றிருந்தமையால் மக்களும் அவர் வழியில் தெய்வ வழிபாட்டில் ஈடுபட்டிருந்தனர். பல சமயத்தவர்களும் ஒற்றுமையுடன் மனங் கலந்து வாழ்ந்தனர். ஒற்றுமையும் அமைதியும் நிலவியமையால் தொழில்களும் வாணிகமும் சீரிய முறையில் நடைபெற்றன. இதனால் மக்கள் நாகரிகத்தில் சிறந்து விளங்கினர்.

மேற் கூறியவற்றால் காவிரிக்கரை நாகரிகம் எத்துணைச் சிறப்புற்றுத் தமிழ் நாட்டின் பெருமையைக் குன்றிலிட்ட விளக்கே போல் உலகெங்கும் ஒளி வீசுமாறு செய்தது என்பது தெள்ளிதிற் புலனாகும்.

7. அணைகள்

ஒரு நாடு உலகத்திற் சிறந்து நாகரிகத்தில் முதிர்ந்து மற்றைய நாடுகள் தலைவணங்கப் பெருமை பெறவேண்டுமானால் அந்நாட்டின் பொருளாதார நிலை சிறந்தோங்கிச் செழிக்கவேண்டும். 'பொருளி லார்க்கு இவ்வுலகமில்லை' என்று வள்ளுவர் கூறியது தனிப்பட்ட ஒருவருக்குமட்டு மின்றி ஒரு நாட்டுக் கும் பொருந்தும். ஆகவே ஒவ்வொரு நாட்டினரும் பாடுபட்டுழைத்துத் தம் நாட்டின் செல்வ நிலையை வளர்த்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளார்கள். அவ் வாறு நாட்டின் பொருளாதார நிலையை உயர்த்து வதும் தங்களை உயர்த்திக்கொள்வதேயாகும் என்பதை ஒவ்வொருவரும் நன்கு உணர்தல் வேண்டும். தமிழ் நாட்டின் வளத்துக்கும் நாகரிகப் பண்புகளுக்கும் உயிர் நிலையாய்த் திகழ்வது காவிரி யாறேயாம். இக்காவிரியை மிகப் பழங்காலம் முதலே மன்னர் நம் நாட்டுப் பொருளாதார உயர்வுக்கு நன்கு பயன்படுத்திவந்துள்ளனர்.

அணைகளும் பொருளாதாரமும்

ஒரு நாட்டின் பொருளாதார நிலையை உயர்த்து வதற்கு அணைகளே அடிப்படையான காரணங்க ளாம். அணைக்கட்டுகள் நீரைத் தேக்கி வயல் வளத்தைப் பெருக்க உதவுவதோடல்லாமல் மின்சார சக்தியை உற்பத்தி செய்து அதன் மூலம் பற்பல தொழில்களையும் வளர்த்து ஒரு நாட்டின் செல்வ நிலையை உயர்த்துகின்றன. அமெரிக்காவிலுள்ள போல்டர் அணைக்கட்டும், நைல் நதியின் குறுக்கே உள்ள ஸென்னர் அணைக்கட்டும், சிந்து நதியின்

குறுக்கே அமைந்துள்ள சுக்கூர் அணைக்கட்டும் உலகப் புகழ் வாய்ந்தவை. இவற்ருல் அந்நாடு களின் பொருளாதார நிலை மிகவும் உயர்ந்துள்ளமை அனைவரும் அறிந்ததே.

அணைகளின் இரு வகைகள்

அத்தகைய அணைக்கட்டுகள் இரண்டு வகைப் படும். உழவு, படகுப் போக்கு வரவு போன்ற செயல்களுக்காகத் தண்ணீரின் மட்டத்தை உயர்த்த வும், நீரை வேறு பக்கம் கால்வாய்களின் மூலம் பாயு மாறு திருப்பவும் கட்டும் அணைக்கட்டுகள் முதல் வகையாம். காவிரியின் குறுக்கே கட்டப்பட்டுள்ள மேலணை, கல்லணை, கீழணை ஆகியவைகள் இவ்வகை யைச் சார்ந்தனவாம். இவ்வணைகள் ஆற்றின் அக லத்தின் அளவே அமைந்திருக்கும்; அதிக உயரமாக வும் இரா. நீரைத் தேக்கிவைத்து வேண்டியபோது பயன்படுத்திக்கொள்ளும் வகையில் அமைந்த அணை கள் இரண்டாம் வகையைச் சார்ந்தனவாம். இவை ஆறு ஓடும் பள்ளத்தாக்குகளின் குறுக்கே, ஆற்றின் அகலத்தை விடப் பன்மடங்கு நீளமாய், தேக்க வேண்டிய நீரின் அளவுக்கு ஏற்றவாறு மிக்க உயர மாய் அமைந்திருக்கும். காவிரியின் குறுக்கே உள்ள கிருஷ்ணராஜசாகரம் அணைக்கட்டும், மேட்டூர் அணைக்கட்டும் இவ்வகையைச் சார்ந்தன. இவ்வணை களில் நீரின் மட்டம் மிக்க உயரமாய் இருப்பதால் மின்சார உற்பத்தி செய்ய ஏற்ற வசதிகள் உள்ளன. இங்ஙனம் பல நலன்கள் பொருந்திக் காவிரியின் குறுக்கே உள்ள அணைகளைப்பற்றி ஈண்டுச் சுருக்க மாகக் கூறுவோம்.

கரிகாலனும் காவிரியும்

காவிரியாற்றின் குறுக்கே பல அணைகள் கட்டப் பட்டிருப்பினும் முதன் முதலில் இருமருங்கும் காவிரிக்குக் கரையமைத்த பெருமை கரிகாலனையே சார்ந்ததாகும். அவன் காலத்தில் காவிரி மிகப் பெரிய ஆருய்ப் பரந்தோடி அளவற்ற நீரை வீணே கடலுடன் சேர்த்துக்கொண்டிருந்தது. அதனோடன்றி மழைக் காலத்தில் காவிரியில் பெருவெள்ளம் புரண்டு கரைகளை மோதி உடைத் துப் பெருகிப் பல ஊர்களை அழித்துவந்தது. அத்தகைய வெள்ளத்தால் நிலங்களெல்லாம் மணல் மேடிட்டுப் பாழாயின. காவிரியால் உழவுத்தொழில் வளம் பெறுவது போய் அழியத் தொடங்கியது. இந் நிலையைக் கண்டு வருந்திய மன்னன் கரிகாலன் நெடிது சூழ்ந்து காவிரியின் நீரை ஒழுங்குபடுத்தி உழவுத் தொழிலுக்குப் பயன்படுத்துதற்குக் காவிரி யின் இருமருங்கினும் பலமான கரைகளை அமைப் பதே ஏற்றதாம் என முடிவு செய்தான். கரிகாலனின் அறிவாற்றல்தான் என்னே !

காவிரிக்குக் கரை கட்டியமை

காவிரி ஆறு பெருக்கெடுத்தோடும் இடம் முழு வதும் காவிரிக்குக் கரையமைப்பது என்பது எளி தான காரியமா ? மின்சாரம், விஞ்ஞானம், இயந்திரம் முதலிய வசதிகள் யாவும் பெற்றுள்ள இக்காலத்தி லேயே இத்தகையதொரு திட்டத்தை நினைக்கவும் நடுங்கும்போது, இத்தகைய வசதிகள் யாவுமற்ற அக் காலத்தில் கரிகாலன் இப்பெரு முயற்சியை மேற் கொண்டான் என்ருல், அவன் ஆற்றலை என் னென்று புகழ்வது !

கரிகாலன் இப்பெரும் பணியில் தன்னால் வென்று அடிமைப்படுத்தப்பட்ட சிற்றரசர்களை யெல்லாம் ஈடு படுமாறு செய்தான். மற்றும் கரிகாலன் தன் கடற் படையைக்கொண்டு வென்று சிறை கொண்டுவந்த 12,000 ஈழநாட்டு மக்களை இப்பணியில் ஈடுபடுத்தி னான்; காவிரிக்குக் கரைகட்டி முடித்தவுடன் அவர் களை விடுதலை செய்தான். இச்செய்தி ஈழத்தில் கி. பி. ஐந்தாம் நூற்றாண்டில் எழுதப்பட்ட சில சரித்திரக் குறிப்புக்களிலிருந்தும், காவிரிக் கரையிலுள்ள திரு நெய்த்தானம் என்ற ஊரில் உள்ள கல்வெட்டு ஒன்றி லிருந்தும் நன்கு விளங்குகிறது.

சோழநாடு வளம்பெற்றமை

இங்ஙனமாகக் கரிகாலன் திருவரங்கத்திலிருந்து காவிரிப்பூம்பட்டினம் வரை சுமார் நூறு மைல் பலமான கரையமைத்தான். அவன் கட்டிய கரை காவிரியின் போக்கில் காற்பாக மாகும்; கரை கட்டியதுடன் அமையாமல் ஆங்காங்கு மதகுகளை அமைத்தும் கால்வாய்களை அமைத்தும் காவிரி நீரின் பெரும் பகுதி சோழநாட்டின் உழவுத் தொழிலுக்குப் பயன்படுமாறு செய்தான். அதனால் சோழநாடு பூலோக சுவர்க்கமாய்–இன்ப புரியாய்–திருமகள் திரு நடனஞ் செய்யும் இடமாய்த் திகழ்ந்து 'சோழ வள நாடு' எனப் பெயர்பெற்று விளங்கியது. கரிகாலன் செய்த இச்செயற்கருஞ் செயலை வியந்து மக்கள் அவ்வளத்துக்குக் காரணமான அவனை 'வளவன்' என்றும், 'திருமாவளவன்' என்றும் பாராட்டிப் போற்றினர். புலவர்கள், "காவிரி புரக்கும் நாடு கிழவோன்" என்றும், "காவிரி புரக்கும் நன்னாட்டுப்

பொருந '' என்றும், '' காவிரிக்கிழவன் '' என்றும் அவனைப் புகழ்ந்து பாடினர்.

கல்லணை

காவிரியின் இருபுறமும் கரையமைத்துச் சோழ நாட்டை வளமுறச் செய்த கரிகால் வளவனுக்குப் பின்னர் வந்த சோழ மன்னர்களும் காவிரியைக் கண்ணும் கருத்துமாய்ப் போற்றி நீர் வளம் பெருக்கி வந்தனர். காவிரியின் கரைகள் அவ்வப்பொழுது சீர்திருத்தி அமைக்கப்பட்டன. கால்வாய்கள் பல வெட்டப்பட்டன. காவிரியின் கிளை நதியாகிய கொள் ளிடம் சீரங்கத்தினருகில் காவிரியின் பக்கலில் ஓடு கிறது. அவ்விடத்தில் உள்ளாறு என்னும் வாய்க்கால் காவிரியையும் கொள்ளிடத்தையும் இணைக்கிறது. அங்குக் கொள்ளிடத்தின் மட்டம் காவிரியின் நீர் மட்டத்தைவிடத் தாழ்வாக இருக்கிறது. அதனால் காவிரியின் நீர்ப் பெருக்கு முழுவதும் கொள்ளிடத் தில் கலந்து, வீணே ஓடிக் கடலில் வீழ்ந்துகொண் டிருந்தது. காவிரியின் நீர்ப் பெருக்கை இழந்த தஞ்சைமாவட்டம் உழவுத் தொழில் வளம் குன்றி வருந்தியது. இத்தகைய குறையை 1600 ஆண்டு கட்கு முன்னரே கண்டான் ஒரு சோழமன்னன். அவன் தன் மதிநுட்பத்தால் உள்ளாற்றின் குறுக்கே காவிரியின் வடகரையில் மிகப் பெரியதோர் அணை யைக் கட்டிக் காவிரியின் நீரைக் கொள்ளிடத்தில் பாயாதவாறு தடுத்துத் திருப்பினன். அவ்வாறு அமைக்கப்பட்ட அணையே கல்லணையாகும்.

அமைப்பும் பயனும்

சோழவளநாட்டில் அமைந்துள்ள அணைகளில் கல்லணையே தலை சிறந்ததாம். இக்கல்லணையைச் சோழநாட்டின் அச்சாணி என்னலாம். முற்காலத்தில் இது 1080 அடி நீளமும், 15முதல் 18 அடி உயரமும், ஐந்தடி அகலமும் உடையதாய் வளைந்து வளைந்து பாம்புபோல் அமைந்திருந்தது. இது களி மண்ணாலும் கற்களாலும் அமைக்கப்பெற்று இத்துணைக் காலமாகக் காவிரியின் வெள்ளங்களைத் தாங்கி அழியாமல் நிலைபெற்றுள்ளது. அதற்குக் காரணம் இவ்வணையில் பயன்படுத்தப்பட்ட பற்பல பொருள்களின் பேருறுதியேயாகும் என நிபுணர்கள் கருதுகின்றனர். இது பண்டைக்கால மக்களின் கட்டடக் கலைத் திறமையையும் பேரறிவையும் விளக்கி நிற்கிறது. காவிரியின் குறுக்கே அமைந்த அணைகள் யாவற்றிலும் இதுவே மிக்க பழமையானதாகும். இப்பழைய அணை பல காலங்களில் படிப்படியாகச் சீர்திருத்தி அமைக்கப்பட்டுவந்துள்ளது. கி. பி. 1840-இல் பழைய அணையையே அடிப்படையாகக் கொண்டு இதன்மீது ஒரு பாலம் அமைக்கப்பட்டுள்ளது. தேவைக்கு அதிகமான தண்ணீர் காவிரியில் பாய்ந்தால் இவ்வணை திறக்கப்பட்டு நீர் கொள்ளிடத்தில் பாயுமாறு செய்யப்படுகிறது.

காவிரி—வெண்ணாறு 'ரெகுலேடர்'

மேலணை கட்டப்பட்டபின் காவிரியில் அதிகமான நீர் பெருகலாயிற்று. வெள்ளம் நேர்ந்த சமயங்களில் காவிரியின் கரைகள் உடைப்பெடுத்து நிலங்கள் பாழாயின. இங்ஙனம் காவிரியின் நீர் வீணாகாமல் தடுப்பதற்கும், வேண்டும்பொழுது தண்ணீரை

ஒழுங்குபடுத்தி அனுப்புவதற்கும் காவிரியின் குறுக்கே ஓர் அணை கட்டவேண்டுவது அவசிய மாயிற்று. அவ்வாறு அமைக்கப்பட்ட அணையே காவிரி—வெண்ணுறு ரெகுலேடராம். இது கல்லணை யின் அருகில் நேர் கோணத்தில் காவிரிக்குக் குறுக்கே கட்டப்பட்டுள்ளது. இவ்விடத்திற்கு மேற்கே காவிரியி லிருந்து வெண்ணுறு என்ற ஆறு பிரிந்து காவிரியை ஒட்டியே ஓடிவருகிறது. இவ்வணை கட்டும்பொழுது வெண்ணுற்றின் போக்கைத் திருப்பி இவ்வணை உள்ள இடத்தில் காவிரியுடன் கலக்குமாறும் அணைக்கு அப்பால் பிரியுமாறும் செய்துள்ளனர். இதனுல் இங்கு ஒரு பெரிய நீர்த்தேக்கம் அமைந்துள்ளது. இவ்வணையிலிருந்து காவிரி ஒரு புறமும், வெண்ணுறு மற்ருெரு புறமும், தென்கோடியில் கல்லணைக் கால்வாய் என்ற ஒரு கால்வாயும் பிரிந்துச் சோழ நாடு முழுவதற்கும் நீரைக் கொண்டு செல்கின்றன. இவ்வணையின் உதவியால் காவிரி, வெண்ணுறு, கல்லணைக் கால்வாய் ஆகிய மூன்றிலும் தண்ணீர் தேவைக்குத் தக்கவாறு பிரித்து அனுப்பப்படுகிறது. இங்ஙனம் காவிரியாற்றின் முக்கிய அணைகளாகிய கல்லணைக்கும், காவிரி-வெண்ணுறு ரெகுலேடருக் கும் 'கிராண்ட் அணைக்கட்டு' என்ற பெயர் வழங்கி வருகிறது. காவிரியிலும், கிளையாறுகளிலும், கால் வாய்களிலும் தண்ணீரை ஒழுங்குபடுத்துவதற்கும் வெள்ளத்தால் சேதங்கள் நேராமல் தடுப்பதற்கும் பற்பல இடங்களில் இதுபோன்ற பல சிறு அணை களும் மதகுகளும் கட்டப்பட்டுள்ளன. கிராண்ட் அணைக்கட்டினுல் மட்டும் தஞ்சாவூர் மாவட்டத்தில் பத்து லக்ஷம் ஏக்கருக்குமேல் நிலம் பயிர் செய்யப் படுகிறது.

1589—6



கல்லணை—காவிரி—வெண்ணாறு ‘ரெகுலேடர்’

மேலணை

கல்லணை சீர்திருத்தி அமைக்கப்பட்ட பிறகு சீரங்கத்திற்கு மேற்கே கொள்ளிடம் பிரியுமிடத்தி லேயே காவிரியின் நீர் கொள்ளிடத்தில் பெருகத் தொடங்கியது. அதற்குக் காரணம் அவ்விடத்திலும் காவிரியின் நீர் மட்டத்தை விடக் கொள்ளிடத்தின் நீர் மட்டம் தாழ்வாக உள்ளமையேயாம். இங்ஙனம் தண்ணீர் மிகுதியாகப் பெருகிக்கொண்டு வந்தமை யால் கொள்ளிடம் ஆழமாகிக்கொண்டே வந்தது. அதற்கு மாருகக் காவிரி மணல் மேடிட்டுக்கொண்டு வந்தது. இதனுல் காவிரியின் கழிமுகப் பிரதேசம் நீரில்லாமல் பாழ்பட்டது. சில சமயங்களில் பெரு வெள்ளம் வரும்போது காவிரி மணல் மேடிட்டுள்ள காரணத்தால் கரையை உடைத்துக்கொண்டு காவிரி நீர் நாற்புறமும் பரவி மிகுந்த அழிவை விளைத்தது. இத்தகைய இன்னல்களைப் போக்க இருபத்தைந் தாண்டுகள் வரை பற்பல முயற்சிகள் கையாளப் பட்டும் பயன்படவில்லை. எனவே, இவ்விடத்தில் கொள்ளிடத்திற்குக் குறுக்கே 1836-இல் ஓர் அணை கட்டப்பட்டது. இது கல்லணைக்கு மேற்கே 20 மைல் தூரத்தில் கட்டப்பட்டமையால் மேலணை என்று வழங்கப்பட்டுவருகிறது. இவ்வணைக்குத் திட்டம் வகுத்தவர் ஸர் ஆர்தர் காட்டன் என்பவராவர்.

மேலணையின் அமைப்பும் பயனும்

மேலணை கட்டடக்கலைக்குச் சிறந்த எடுத்துக் காட்டாக விளங்குகிறது. இஃது அணையாகவும் ஆற்றைக் கடக்கும் பாலமாகவும் உதவிவருகின்றது. இதைப் போன்ற அமைப்பு நம் நாட்டில் வேறெங்கும் இல்லை. இவ்வணையில் 40 அடி அகலமுள்ள 55

கண்வாய்கள் உள்ளன. அக்கண்வாய்களை மூட அமைக்கப்பட்டுள்ள இருப்புக் கதவுகள் ஒவ்வொன்றும் எட்டு டன் நிறையுள்ளது. ஆயினும் இதனை ஒருவனே உயர்த்தவும் தாழ்த்தவும் கூடுமாறு மிக்க திறமையாக அமைத்துள்ளனர். இவ்வணையைக் கட்டுவதற்கு இரண்டரை லக்ஷம் ரூபாய் செலவாயிற்றும். வெள்ளமில்லாத காலங்களில் இவ்வணை நன்ருக மூடப்பட்டுக் காவிரியில் நீர் பாய்ச்சப்படுகிறது. இவ்வணையினுல் தண்ணீர் காவிரியிலேயே பாயத் தொடங்கியதால் காவிரி வர வர ஆழமாகிக் கொண்டு வந்தது. இந்நிலையை மாற்றுவதற்காக 1845-இல் இவ்விடத்தில் கொள்ளிடத்தின் குறுக்கே கட்டியது போலக் காவிரியின் குறுக்கேயும் ஓர் அணை கட்டப்பட்டது. இதில் மணலைத் தடுக்கும் மதகுகளும் அமைக்கப்பட்டுள்ளன. இதனுல் காவிரியின் நீர்ப் போக்கு ஒழுங்குபடுத்தப்பட்டு உழவுத் தொழிலுக்கு மிகவும் உதவிவருகிறது.

கீழணை

மேலணை கட்டப்பட்ட காரணத்தால் கொள்ளிடத்தில் நீர்ப் பெருக்கு வற்றினமையால் நீரின் மட்டம் மிகக் குறைந்தது. கொள்ளிடம் பாய்ந்து வளஞ் செய்யும் தென் ஆர்க்காடு மாவட்ட மக்கள் இதனுல் உழவுத்தொழில் வசதி குன்றி வருந்தலாயினர். அக்குறையைப் போக்க மேலணைக்குக் கிழக்கே 67 கல் தொலைவில் கொள்ளிடத்தின் குறுக்கே கீழணை என்ற பெயருடன் ஓர் அணை கட்டப்பட்டது. இதுவும் மேலணையைப் போன்ற எல்லாவித வசதிகளும் உடையதாக அமைக்கப்பட்டுள்ளது. இது 33 அடி அகலமுள்ள 70 கண்வாய்களை உடையதாக

உள்ளது. இவ்வணையினால் தென் ஆர்க்காடு மாவட்டம் பயன்படுவதோடன்றித் தஞ்சை மாவட்டத்தின் வடகிழக்குப் பகுதியிலுள்ள நிலங்களும் வளம் பெற்றுள்ளன. இதன் உதவியால் 6 லக்ஷம் ஏக்கர் நிலம் பயிரிடப்பெற்றுவருகிறது.

இவையன்றிக் காவிரியின் குறுக்கிலும், கிளையாறுகள் வாய்க்கால்கள் ஆகியவற்றின் குறுக்கிலும் பற்பல மதகுகள் அமைக்கப்பெற்றுள்ளன. இவற்றால் காவிரியின் நீர் சோழ நாட்டின் பல பகுதிகளுக்கும் பகிர்ந்தளிக்கப்படுகிறது. இன்று இவை உணவுப் பெருக்கத்திற்குப் புரியும் உதவிகள் கணக்கிலடங்காதனவாம்.

8. நீர்த்தேக்கங்கள்

மேட்டூர் நீர்த்தேக்கம்

மேற்கூறிய அணைகள் பல இருந்தும் காவிரியின் கழிமுகப் பகுதியில் உழுதொழில் எல்லாக் காலங்களிலும் தொடர்ச்சியாக நடைபெற இயலவில்லை. மழைக் காலங்களில் காவிரியில் நீர் தேவைக்கு மிகுதியாகப் பெருகிக் கடலில் வீணே கலந்துவந்தது. கோடைக் காலத்தில் நீரின்மையால் பயிர் வளம் குன்றலாயிற்று. எனவே, காவிரியின் போக்கில் சோழ நாட்டிற்கு மேற்புறத்தில் ஒரு சிறந்த நீர்த்தேக்கம் நிறுவினால் பெரும்பயன் விளையலாம் என்று அறிஞர்கள் கருதினார்கள். மேட்டூருக்கருகில் காவிரியாறு இரு மலைகளுக்கு இடையில் பள்ளத்தாக்கின் வழியே பாய்ந்துவருகிறது. ஆற்றின் இரு புறங்களிலும் உள்ள அம்மலைகள் காவிரிக்கு

அமைக்கப்பட்ட கரைகள்போலப் பெரிய ஆழமான நிலப்பகுதியை உட்படுத்திக்கொண்டு ஓரிடத்தில் ஒன்றையொன்று நெருங்கி வருகின்றன. அக் குறுகிய இடத்தில் ஓர் அணையை அமைத்தால் பெரிய நீர்த்தேக்கம் உண்டாகி, அதனால் சோழ நாட்டில் ஆண்டு முழுவதும் உழவுத் தொழிலுக்கு வேண்டிய தண்ணீர் கிடைக்கும் என்று கண்டனர். **கர்னல் எல்லிஸ்** என்பார் அவ்வணையை அமைப் பதைப் பற்றிய பெரிய திட்டம் ஒன்றைத் தயாரித்து அரசாங்கத்துக்கு அளித்தார். பற்பல இடையூறு களால் இத்திட்டம் தடைப்பட்டதேனும் ஸர். ஸி. பி. இராமசாமி ஐயரின் பெருமுயற்சி காரணமாக அரசாங்கத்தின் இசைவைப் பெற்றது.

அணைக்கட்டு வேலைகள்

1925-ஆம் ஆண்டு ஜுலை மாதம் 20-ஆம் நாளன்று மேட்டூர் அணைத்திட்டத்தைச் சென்னைக் கவர்னர் **கோஷன் பிரபு** அவர்கள் தொடங்கி வைத்தனர். மூன்று ஆண்டுகள் முன்னேற்பாடு களுக்கான காரியங்கள் செய்யப்பெற்றன. 1928-ஆம் ஆண்டிலேயே அணையின் அடிப்படை தொடங்கப் பெற்றது. அணை கட்டத் தொடங்குவதற்கு முன் மேட்டூர் மிகச் சிறிய கிராமமாய் இருந்தது. அணை கட்டும் வேலை தொடங்கியதும் அது பற்பல நாகரிக வசதிகளையுடைய பெருநகரமாக மாற்றப் பட்டது. அணை கட்டும் வேலைக்கு உதவியாகச் சிவசமுத்திரத்தினின்று மின்சாரம் கொண்டுவரப் பெற்றது. இவ்வணை கட்டுவதற்கு இதுவரை நம் நாட்டில் எங்கும் பயன்படுத்தப்படாத பற்பல நவீன இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டன. அவற்றில் 306

அடி உயரமும் 64 சக்கரங்களும் கொண்ட இரண்டு பெரிய இயந்திரக் கூம்புகள் (Concreting Towers) குறிப்பிடத்தக்கவை. எனினும் ஐந்தில் நான்கு பங்கு வேலையைக் கூலியாட்களே செய்தனர். இது வியப்பைத் தருவதாகவேயுள்ளது. இதனால் செலவு மிகவும் குறைக்கப்பட்டது. இங்ஙனம் இவ்வணை ஆறு ஆண்டுகளில் 450 லக்ஷம் ரூபாய் செலவில் கட்டி முடிக்கப் பெற்றது. 1934-ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 21-ஆம் நாள் சென்னைக் கவர்னர் ஸர் பிரடெரிக் ஸ்டான்லி இவ்வணையைத் திறந்து வைத்தார்.

அணையின் அமைப்பு

மேட்டூர் அணை 5,300 அடி நீளமுடையதாய் 176 அடி உயரமுடையதாய் அமைந்துள்ளது. இவ்வணையின் மேற்புறத்தின் அகலம் $20\frac{1}{2}$ அடிகளாம். அதன் இடையே பதினாறு அடி அகலமுள்ள சாலை உள்ளது. அதன் இருபுறங்களிலும் கைப்பிடிச் சுவர்கள் அமைக்கப்பெற்றுள்ளன. இவ்வணையால் ஏற்பட்டுள்ள நீர்த்தேக்கம் 60 சதுர மைல் பரப்புள்ளதாக ஏற்பட்டுள்ளது. அணையிலிருந்து 33 மைல் தூரம் வரையில் தண்ணீர் எதிர்த்துத் தேங்கி நிற்கிறது. நீர்த்தேக்கத்தின் அதிகமான ஆழம் 165 அடிகளாம். இப்பகுதியில் காவிரி 1,100 அடி அகலமே உள்ளது. இந் நீர்த்தேக்கத்தில் 93,500 மிலியன் கனஅடி தண்ணீர் தேங்கலாம் என்று பொறிவல்லுநர் கணக்கிட்டிருக்கின்றனர்.



புகழ்பெற்ற மேட்டூர் அணையும் நீர்த்தேக்கமும்

நீர்த்தேக்க வசதிகள்

இவ்வணையில் நீர்ப்போக்கை ஒழுங்குபடுத்துவதற்கு ஏற்ற பலவசதிகள் அமைந்துள்ளன. எஃகினால் ஆகிய பெரிய மதகுக் கதவுகள் இதில் அமைக்கப்பட்டுள்ளன. இவ்வணையில் மிக்க அதிகமான நீர்ப்பரப்பின் உயரம் கடல் மட்டத்திலிருந்து 790 அடிகளாம். 770 அடி உயரத்தில் பதினாறு மேல் மதகுகளும், 720 அடி உயரத்தில் எட்டு மதகுகளும், 670 அடி உயரத்தில் ஐந்து கீழ் மதகுகளும் ஆக மூன்று வரிசை மதகுகள் இதில் அமைக்கப்பட்டுள்ளன. இவ்வணையைச் சார்ந்த மதகுக் கதவுகள் யாவும் மின்சார சக்தியால் இயக்கப்படுகின்றன. இவ்வணை மிகவும் பெரியதாகையால் இதன் நடுவில் ஒரு கசிவு நீர்ச் சுரங்கம் அமைக்கப்பட்டிருக்கிறது. அணையைச் சோதனை பார்க்கவும், கசிவு நீர் வெளிப்படவும் இது பெரிதும் துணைபுரிகிறது. இங்கு ஆற்றின் வலக்கரையில் அணையிலிருந்து வடக்கே சிறிது தூரத்தில் ஒரு கழிவு நீர் வாய்க்கால் அமைக்கப்பெற்றுள்ளது. அதற்குக் குறுக்கிலும் ஓர் அணை உள்ளது. அதிகமான வெள்ளப் பெருக்கு நேரும் காலத்தில் அதன் மூலமாக நீர் வழிந்தோடுமாறு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இத்தகைய வசதிகளால் இவ்வணை உலகப் புகழ்பெற்ற பேரணைகளுள் ஒன்றாகக் கருதப்படுகிறது.

நினைவுச் சின்னம்

இத்திட்டம் வெற்றிகரமாக முடிந்தமைக்காக இவ்வணையின் அருகில் ஒரு நினைவுச் சின்னம் நிறுவப்பெற்றுள்ளது. இஃது ஒரு குன்றின்மேல் எண்கோண வடிவத்தில் கட்டப்பெற்றுள்ள கட்டடமாகும்.

இதன் உச்சி அரைப்பந்து வடிவமாய் அமைந்துள்ளது. இதன் உட்புறத்தில் மங்கலான ஒளியுடைய பலநிற விளக்குகள் அமைந்துள்ளன. சுவர்களில் அணையின் உருவப் படமும், பல விவரங்களும் பொறிக்கப்பெற்றுள்ளன. இக்கட்டடத்திலிருந்து பார்த்தால் அணையும் நீர்த்தேக்கமும் மிகவும் அழகாகக் காட்சியளிக்கின்றன. அணையின் மறுபுறத்தில் 34 ஏக்கர் பரப்புடைய ஓர் அழகிய பூஞ்சோலை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

கிருஷ்ணராஜ சாகரம்

சோழ வளநாட்டை வளப்படுத்துவதற்கு மேட்டூர் அணை உதவுவதுபோல் மைசூர் நாட்டை வளப்படுத்துவதற்குக் கிருஷ்ணராஜ சாகரம் உதவியாக இருக்கிறது. இவ்வணை மைசூருக்கு வடமேற்கில் பன்னிரண்டு கல் தொலைவில் உள்ளது. இவ்விடத்தில் காவிரியாற்ருேடு வடபால் ஹேமாவதியும் தென்பால் இலட்சுமண தீர்த்தமும் கலப்பதால் இயற்கையிலேயே இப்பகுதி ஒரு பெரிய கடல்போலவே காட்சி அளிக்கிறது. இத்தகைய இயற்கை வசதிகள் வாய்ந்த இவ்விடத்தில் பண்டைக் காலம் முதலே அணை கட்டிப் பெரிய நீர்த்தேக்கத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணம் இருந்துவந்ததாகத் தெரிகிறது. இவ்வணை கட்டுவதற்கு அடிப்படையைத் தோண்டுகையில் ஒரு பழைய கல்வெட்டுக் கிடைத்துள்ளது. திப்பு சுல்தான் காலத்திலேயே அவ்விடத்தில் அணை கட்டுவதற்காக அவர் முயற்சி செய்தமை அக்கல்வெட்டால் விளங்குகிறது.

அணை கட்டப்பட்டதன் நோக்கம்

கிருஷ்ணராஜ சாகரம் அணை, காலம் சென்ற மைசூர் மன்னர் கிருஷ்ண ராஜேந்திர உடையார் காலத்தில் அவர் ஆதரவினால் 1911-ஆம் ஆண்டு துவக்கப்பெற்றுப் பதினாறு ஆண்டுகளில் முடிக்கப் பட்டது. இவ்வணையைக் கட்டி முடிப்பதற்கு 250 லட்சம் ரூபாய் செலவாயிற்றாம். இத்தகைய ஒரு பெரிய திட்டத்தை ஏற்றுத் திறம்பட முடித்து மைசூர் நாட்டின் உணவு வளத்தைப் பெருக்கிய அரசர் பெயராலேயே இந்நீர்த்தேக்கம் கிருஷ்ணராஜ சாகரம் என்று வழங்கப்பட்டுவருகிறது. காவிரியாற்றில் வெள்ளம் இல்லாத போதும் சிவசமுத்திரம் மின்சார நிலையத்தில் மின்சார உற்பத்தி தடைப்படாமல் பெருகவும், மழையின்மையால் பஞ்சத்தால் வாடும் நாட்டின் பல பகுதிகளிலுள்ள நிலங்களுக்கு நீர்ப் பாசன வசதி அளிக்கவும் பயன்பட வேண்டும் என்ற நோக்கத்தாலேயே இவ்வணை அமைக்கப்பட்டது.

அணையின் அமைப்பு

இவ்வணை 8,600 அடி நீளமும் 130 அடி உயரமும் உடையது. நீர்த்தேக்கத்தின் அளவு 50 சதுர மைல் என்று கணக்கிட்டிருக்கின்றனர். இந்நீர்த் தேக்கத் தில் 48,335 மிலியன் கன அடி நீர் தேங்க வசதி உள்ளது. இது முற்றிலும் கற்களாலேயும் சிமெண் டினாலேயும் கட்டப்பட்டுள்ளது. இவ்வணையின் உச்சியில் அழகிய கைப்பிடிச் சுவரும் மின்சார விளக்குகள் அமைந்த சாலையும் உள்ளன. இவ்வணை யின் இடையிடையே மின்சாரத்தால் இயக்கக்கூடிய பெரிய கதவுகளைக் கொண்ட மதகுகள் உள்ளன. இம்மதகுகளின் மூலம் காவிரி நீர் விசையுடன்

பாய்ந்து ஓடும் காட்சி அழகானதாகும். அணையின் முன்புறத்தில் காவிரி அன்னையின் அழகிய சிலை ஒன்றை நிறுவியுள்ளனர். அம்மை தன் கரத்தால் காவிரிநீரை அள்ளி மக்கட்கு வழங்குவது போல் இச்சிலை அமைக்கப்பட்டுள்ளது. நீர்த் தேக்கத்தில் உள்ள காவிரிநீர் அணையை ஊடுருவிக்கொண்டு வந்து காவிரி அன்னையின் கரங்களிலிருந்து எப் பொழுதும் பெருகிக்கொண்டே இருக்குமாறு அமைத் துள்ளமை மிகவும் வியப்பினை அளிப்பதாகும்.

பிருந்தாவனக் காட்சி

இவ்வணைக்கு முன்புறத்தின் ஒரு பகுதியில் பிருந்தாவனம் என்ற புகழ்பெற்ற நந்தவனம் அமைக்கப்பட்டுள்ளது. இதனைப் பூலோக சுவர்க்க மெனவே கூறலாம். பிருந்தாவனத் தோட்டத்தின் முகப்புவாயில் மிக்க அழகாக அலங்கரிக்கப்பட்டிருக் கிறது. முகப்பிலிருந்து படிப்படியாகத் தாழ்ந்து கொண்டே போகுமாறு பல அடுக்குகளாக அத் தோட்டம் அமைந்துள்ளது. மைசூர் அரசாங்கத் தார் இருபுறமும் நடைபாதைகளும், இடையில் அகல மான படிகளின் வழியே நீர் ஓடிவருமாறும் அமைத் துள்ளனர்; ஒவ்வொரு படியின் கீழும் பலநிற மின் விளக்குகளை வைத்து, அவ்வொளி நீரின்மீது படுமாறு செய்துள்ளனர். அதனால் ஓரிடத்தில் செம்பஞ்சுக் குழம்பைக் கரைத்து ஊற்றினாற் போல வும், மற்றோரிடத்தில் பச்சை மரகதத்தைப் பொடி செய்து பரப்பினாற் போலவும், பிறிதோரிடத்தில் நீல நிறமுடைய வானமே படிந்து பெருகுவது போலவும் பல நிறங்களாக நீர் அழகுடன் ஓடிவருகிறது. பல நிறங்களுடன் படிப்படியாக ஓடிவரும் இவ்வழகிய



கிருஷ்ணராஜ சாகரம் : பிருந்தாவனம்

நீரோட்டத்தைக் கீழ்ப்படியிலிருந்து காண்பவர் மெய் மறந்து அவ்வின்பக் காட்சியிலேயே கருத்தூன்றித் திளைப்பர் என்ருல், அக்காட்சியைப்பற்றி நாம் யாது கூற இயலும்! நடைபாதையின் இருமருங்கிலும் அழகிய செடிகளை வளர்த்துக் கத்தரித்துத் திண்ணை களைப் போல அமைத்துள்ளனர். அவை விளக்கொளி யில் மரகதத்தால் அமைக்கப்பட்ட திண்ணைகளோ என மயங்குமாறு விளங்குகின்றன. மற்றும் அத் தோட்ட முழுவதும் மின்விளக்கின் உதவியால் பல நிற நீரூற்றுக்களை அமைத்துள்ளனர். விநாடிக்கு ஒரு முறை அந்நீரூற்றுக்கள் பல்வேறு நிறங்களுடன் மாறி மாறிப் பலநிற மணிகளை வாரிவாரி இறைப் பது போல நாற்புறமும் நீர்த்துளிகளை அள்ளி வீசும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும். மேலும் அவ் விடம் பலவிதமான மலர்ச்செடி கொடிகளும் வசதி யான இருக்கைகளும் அமையப்பெற்று இன்பப் பொழுது போக்கிற்கு ஏற்ற இடமாகத் திகழ்கிறது.

9. மின்சார உற்பத்தி

நம் நாட்டின் நிலை

ஒரு நாட்டின் தொழில் வளர்ச்சி, வாணிகச் சிறப்பு, பொருளாதார நிலையின் உயர்வு ஆகியன அந்நாட்டில் இயற்கையாக அமைந்துள்ள மூலதனத் தைப் பொறுத்துள்ளன. முற்காலத்தில் அம்மூல தனங்கள் இரும்பும் நிலக்கரியும் எனக் கருதப் பெற்றன. ஆனல் அவை எடுக்க எடுக்கக் குறை வுறும். இக்காலத்தில் அத்தகைய மூலதனம் மின்சார சக்தியாம். அஃது ஒரு நாட்டின் வற்ருத செல்வ

மாக அமைந்துள்ளது. எனவே, மின்சார கால மாகிய இக்காலத்தில் மின்சாரமே நாட்டின் உயிர் நிலையாக உள்ளது. அத்தகைய மின்சார வசதி, இயற்கை வளங்களாகிய ஆறுகள் நிறைந்த நம் நாட்டில் மிகுதியாய் அமைந்துள்ளது. ஆனால் இயற்கை அன்னை நமக்கு அளித்துள்ள பெரும் பயனை நாம் முழுவதும் நன்கு பயன்படுத்தவில்லை. உதாரணமாக அயல் நாட்டவர் தம் நாட்டிலுள்ள மின்சார வசதியில் பெரும் பகுதியைப் பயன்படுத்திக் கொண்டுள்ளனர். ஸ்விட்ஸர்லாந்து என்னும் மிகச் சிறிய நாட்டில் 72 சத வீதமும், ஜெர்மனியில் 55 சத வீதமும், இத்தாலியில் 47 சத வீதமும் மின்சார உற் பத்தி செய்யப்பட்டுப் பலவகைத் தொழில்கள் வளர்ச்சியுறுகின்றன. நம் நாட்டில் பற்பல ஆறுகள் மலைகளின் வழியே ஓடிப் பற்பலவிடங்களில் அருவி களாகப் பாய்கின்றன. இவ்விடங்களில் மின்சாரம் தோற்றுவிக்கப்பட்டால் 270 லட்சம் குதிரை வேகம் மின்சாரசக்தி உற்பத்தி செய்யக்கூடும் என்று நிபுணர்கள் கணக்கிட்டுள்ளனர். இத்தகைய வசதிகள் நமக்கிருந்தும் நாம் இன்று 5 லக்ஷம் குதிரை வேகம் மின்சாரமே உற்பத்தி செய்துவருகிறோம். இஃது இரண்டு சதவீதத்துக்கும் குறைவாகிறது. எனினும் மிகக் குறைந்த விகிதமான அம்மின்சாரத்தைத் தோற்றுவிப்பதில் அன்னை காவிரி பெரும் பங்கெடுத் துள்ளாள் என்பதை நினைக்க நமக்குப் பெருமகிழ்ச்சி உண்டாகிறது.

மின்சாரத்தின் பயன்

இம்மின்சாரம் இப்போது சிவசமுத்திரம் மேட்டூர் ஆகிய இடங்களில் உற்பத்தி செய்யப்படுகிறது. இது

சென்னை இராச்சியத்திலுள்ள சில வேறு மின்சார நிலயங்களுடன் இணைக்கப்பட்டுப் புதியதொரு திட்டமாக அமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினுல் சென்னை இராச்சியத்திலுள்ள எல்லா நகரங்களுக்கும் சிற்றூர்களுக்கும், கிராமங்களுக்கும் மின்சார வசதி அளிக்கப்படுகிறது. மக்கள் குறைந்த செலவில் மின்சாரத்திஞல் பெரும் பயனடைகின்றனர். வீடு களிலும், தெருக்களிலும், பொதுவிடங்களிலும், கடைகளிலும், அலுவலகங்களிலும் மின்சாரம் விளக் கெரிக்கப் பயன்படுவது அனைவரும் அறிந்ததே. இதுவன்றி நாகரிகத்தின் பயஞகத் தோன்றிய மற்றும் பற்பல வசதிகளையும் மின்சாரம் அளித்து வருகிறது. இதனுல் மக்கள் யாவரும் வாழ்க்கையில் இன்பமுற்றுக் காவிரியன்னையின் பேரருளை எண்ணி மகிழ்கின்றனர்.

சிவசமுத்திர மின்சார உற்பத்தி நிலயம்

கிருஷ்ணராஜ சாகர நீர்த்தேக்கத்தின் பயன் களில் சிவசமுத்திர மின்சார நிலயத்தை முதன்மை யாகக் கூறலாம். இந்நிலயம் மைசூருக்குச் சற்று வடகிழக்கே 35 மைல் தூரத்தில் சிவசமுத்திர நீர் வீழ்ச்சிக்கு அருகில் அமைக்கப்பட்டுள்ளது. இந்நில யத்தில் காற்ருடிகள் போன்ற அமைப்புள்ள சக்கரங் களை அமைத்து, நீரின் உதவியால் அவை வேகமாகச் சுழலுமாறு செய்யப்படுகின்றன. இச்சக்கரங்களைச் சுழற்றுவதற்குச் சிறிதளவு நீரே போதும். ஆகையால் இவை நீர்வீழ்ச்சியின் கீழே அமைக்கப்படாமல் நீர் வீழ்ச்சிக்கு வெகுதூரத்தில் காவலான இடத்தில் அமைக்கப்பட்டுள்ளன. நீர்வீழ்ச்சிக்கு மேற்கே



சிவசமுத்திரம் : மின்சார நிலயத்தில் ஒரு பகுதி

இரண்டு கல் தொலைவில் காவிரியிலிருந்து கால்வாயை அமைத்து இம்மின்சார நிலயத்திற்குத் தண்ணீர் கொண்டுவரப்படுகிறது. கால்வாய் பிரியுமிடத்தில் ஓர் அணை கட்டப்பட்டிருக்கிறது. இவ்வணை மின்சார நிலயம் உள்ள மட்டத்தைவிட நானூறு அடி உயர மான மட்டத்திலிருப்பதால் இடைவிடாமல் தண்ணீர் தேங்கி மின்சார உற்பத்திக்குப் பயன்பட உதவுகிறது. ஆற்றில் வெள்ளமில்லாத காலத்திலும் வற்றாத நீர்ப் பெருக்கு ஏற்பட்டு மின்சார உற்பத்தித் தொழில் தடைபெறாமல் நடைபெறுதற்கும் தேவைக்கு மிகுதி யான நீரைக் காவிரியில் கலக்குமாறு செய்வதற்கும் இவ்வணையே பெரிதும் பயன்படுகிறது.

நிலயத்திற்கு நீர்வசதி

இக் கால்வாயின் குறுக்கே மதகுகள் அமைக்கப் பட்டுள்ளன. அவற்றில் 13 குழாய்கள் பொருத்தப்பட் டிருக்கின்றன. அவை ஓர் அடிமுதல் மூன்றரை அடி வரை குறுக்களவுள்ளன. சுமார் ஒரு பர்லாங்கு நீளம் மலைச்சரிவின் வழியே இக்குழாய்கள் சென்று மின் சார நிலயத்தை அடைகின்றன. அவ்விடத்திற்கும் காவிரி சரிவாகப் பாயும் இடத்திற்கும் செங்குத்தான உயரம் 400 அடிகளாம். இவ்விடத்திலிருந்து கீழே பார்த்தால் கிடுகிடு பாதாளமாயிருக்கிறது. அங்கு ஆட்கள் நடந்துசெல்ல முடியாது. அவ்விடங்களுக் குச் செல்வதற்குத் தண்டவாளப் பாதை அமைக்கப் பட்டுள்ளது. அப்பாதையில் டிராலி வண்டிகள் மின்சாரத்தால் இயங்குகின்றன. ஒரு வண்டி மேலே செல்லும்போது மற்றொன்று கீழே இறங்கும். அக் காட்சி காண்பதற்கு மிக்க அழகாக இருக்கும். அவ்



சிவசமுத்திர மின்சார நிலயம் : டிராலி செல்லும் காட்சி

வண்டிகளின் உதவியால் தேவையான பொருள்கள் மேலே எடுத்துச் செல்லப்படுகின்றன.

மின்சார உற்பத்தி

மின்சார உற்பத்தி நிலயம் நான்கு மாடிகளுடன் கூடிய நூறு அடி உயரம் உள்ள பெரிய கட்டடமாகும். குழாய்களின் மூலம் கொண்டுவரப்பெற்ற நீர் இங்கு உள்ள காற்றுடிகளின்மீது மோதுகிறது. அதனால் அவை வேகமாகச் சுழல்கின்றன. அங்ஙனம் சுழல்வதால் ஏற்படும் காந்த சக்தியிலிருந்து மின்சார சக்தி உற்பத்தி செய்யப்படுகிறது. இம் மின்சார சக்தியைச் சேகரிக்கவும் அதைப் பல இடங்கட்கும் அனுப்பவும் பல இயந்திரங்கள் அமைக்கப்

பட்டுள்ளன. இந்நிலயத்தில் சுமார் 67,000 குதிரை வேகம் மின்சார சக்தி உற்பத்தி செய்யப்படுகிறது. இதனுல் மைசூர் நாடு முழுவதும் தொழில் வளத்தில் சிறந்து பொருளாதார நிலயில் உயர்வடைந்து விளங்குகிறது.

10. பொருளாதாரம்

இதுவரை காவிரியின் குறுக்கே அமைக்கப்பட்ட அணைகளையும், மின்சார உற்பத்தியையும் பற்றிப் படித்தோம். இனி, இவற்ருல் நம் நாட்டின் பொருளாதாரநிலை எத்தகைய வளர்ச்சியை அடைந்துள்ளது என்பதைச் சுருக்கமாகக் கூறுவோம்.

கிருஷ்ணராஜ சாகரத்தின் உதவிகள்

காவிரியின் குறுக்கே அமைக்கப்பட்டுள்ள மிகப் பலவாகிய அணைகள் உணவுப் பெருக்கத்திற்கு உதவும் முறைகளை முதலில் காண்போம். மைசூர் நாட்டில் மட்டும் காவிரியின் குறுக்கே பன்னிரண்டு அணைகள் கட்டப்பட்டுள்ளன. மைசூர் நாடு வறண்ட வளமற்ற மலைநாடாகையால் உழவுத் தொழில் சிறந்த முறையில் நடைபெற வசதியற்று விளங்கியது. ஆதலால் பண்டைக் காலம் முதலே மன்னர்கள் பற்பல அணைகளைக் கட்டிக் காவிரியின் இயற்கை வளத்தை நன்கு பயன்படுத்தி உழவுத் தொழிலை வளப்படுத்தினர்; ஒவ்வோர் அணையிலிருந்தும் நூற்றுக் கணக்கான மைல் தொலைவு பாயுமாறு கால்வாய்களும் கிளைக் கால்வாய்களும் அமைத்து மைசூர்ப் பிரதேசம் முழுவதற்கும் நீர் வசதி செய்து கொடுத்துள்ளனர். அவைகளில் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கது கிருஷ்ணராஜ சாகரத்திலிருந்து அமைக்கப்பட்ட இர்வின் கால்வாயாகும்.

மைசூர் நாட்டின் வளம்

இங்ஙனம் நீர்வளம் பெருகிய காரணத்தால் இப்போது மைசூர் நாட்டில் 1,25,000 ஏக்கர் நிலங்களில் நெல் முதலிய தானியங்கள் பயிர் செய்யப்

படுகின்றன. இர்வின் கால்வாயின் உதவிகொண்டு 40,000 ஏக்கர் நிலங்களில் சிறந்த கரும்பு பயிர் செய்யப்படுகிறது. மற்றும் உருளைக்கிழங்கு, முலாம் பழம், வெங்காயம், பற்பல காய் கறிவகைகள், கீரை வகைகள் ஆகியவை காவிரியின் கரையோரங் களிலும் மற்றும் பல இடங்களிலும் பயிர் செய்யப் படுகின்றன. மைசூர்ப் பகுதி மலைநாடாகையால் குளிர்ந்த தட்பவெப்ப நிலையைப் பெற்றுள்ளது. எனவே, இப்பகுதியில் ஐரோப்பிய நாடுகளில் விளையும் காய்கறிவகைகளும் பழவகைகளும் மிகுதி யாகப் பயிர் செய்யப்படுகின்றன.

மேட்டூர் அணையும் உழவுத் தொழிலும்

மேட்டூர் நீர்த்தேக்கத்தால் கோயம்புத்தூர் சேலம் ஜில்லாக்களில் வேர்க்கடலை, பருத்தி முதலியவை மிகுதியாக விளைவிக்கப்படுகின்றன. மேட்டூர் நீர்த் தேக்கம் சிறப்பாகத் திருச்சி, தஞ்சாவூர் மாவட்டங் களுக்கே உயிர்நிலையாக உள்ளது. இவ்வணை ஏற்பட்டமையால் கல்லணையிலிருந்து கல்லணைக் கால்வாய் என்ற மிகப் பெரிய ஒரு திட்டத்தை ஏற்படுத்தித் தஞ்சாவூர் மாவட்டத்தின் தென்கிழக்குப் பகுதி முழுவதற்கும் நீர்ப்பாசன வசதி செய்து தரப்பட்டுள்ளது. இக்கல்லணைக் கால்வாயிலிருந்து பல ஆயிரக்கணக்கான கிளைக் கால்வாய்கள் உடலில் நரம்பு மண்டலங்களைப் போல நாற்புறமும் பரவிச் செல்லுகின்றன. கல்லணைக் கால்வாயின் நீளம் 106 மைல் என்றும், கிளைக் கால்வாய்களின் நீளம் 694 மைல் என்றும் கணக்கிடப்பட்டுள்ளன. ஆறு களின் குறுக்கே எண்ணற்ற மதகுகளும், குரம்பு களும் பயிர்த்தொழிலுக்கு வசதியாக அமைக்கப்

பட்டுள்ளன. அவைகளின் உதவியால் கால்வாய்கள் மூலம் தண்ணீர் வீணுகாதபடி அளவாகப் பகுத்து அனுப்பப்படுகிறது. இதனுல் காவிரியின் கழிமுகத்தில் ஒரு சிறு பகுதி நிலமும் வீணுகாமல் உழவுத் தொழிலுக்கு ஏற்ற நிலமாக விளங்குகிறது. இவ் வணைக்கட்டின் உதவியால் தஞ்சாவூர் ஜில்லாவில் மட்டும் 3,01,000 ஏக்கருக்கு மேலாகப் புதிய நிலங்களிலும், $10\frac{1}{2}$ லட்சம் ஏக்கருக்கு மேலாகப் பழைய நிலங்களிலும் பயிர்த்தொழில் நடைபெறுகிறது. இங்ஙனம் காவிரியாறு உணவு உற்பத்தியில் பெருந் தொண்டு புரிந்துவருகிறது.

தொழிற்சாலைகள்

காவிரி பாயும் நாட்டில் பற்பல தொழிற்சாலைகள் அமைந்துள்ளன. அவற்றுள் பஞ்சாலைகளே முதலிற் குறிப்பிடத்தக்கவையாம். மேட்டூர்ப் பகுதியில் நீர்த்தேக்கத்தின் பயனுகவும், அப்பகுதியில் மண் ஏற்றவாறு அமைந்திருப்பதாலும் பருத்தி மிகுதியாய் உற்பத்தி செய்யப்படுகிறது. அப்பருத்தி கோயம் புத்தூர், திருப்பூர், சேலம், மேட்டூர் போன்ற பல இடங்களில் நூலாகவும் துணியாகவும் மிகுதியாகத் தயாரிக்கப்படுகிறது. நீர்த்தேக்கத்தினுல் காற்று ஈரமாயிருப்பதால் இப்பிரதேசம் நூல் நூற்றற்கு மிகவும் ஏற்றதாய் அமைந்துள்ளது. நாளடைவில் இன்னும் பற்பல பஞ்சாலைகள் மேட்டூரினருகில் ஏற்படக்கூடும் என்பது நம்பப்படுகிறது. நூலினுல் பனியன்கள் தயாரிக்கும் தொழிலும் சேலம் முதலிய இடங்களில் மின்சாரத்தால் நடைபெறுகின்றது.

பட்டுநெசவுத் தொழில்

பஞ்சாலைகளேயன்றிப் பட்டு நெசவும் மைசூர்ப் பிரதேசத்தில் சிறப்பாய் நடைபெறுகிறது. அதற்குக் காரணம் அப்பிரதேசத்தில் காவிரிக் கரைகளில் முசுக் கட்டைச் செடி அளவின்றிப் பயிராக்கப்படுவதேயாம். அச்செடி வளர்வதற்கு ஏற்ற தட்பவெப்ப நிலையும் பூசாரமும் மைசூர் நாட்டில் நன்கு அமைந்துள்ளன. மைசூர் அரசியலார் முசுக்கட்டைக் கன்றுகளை மக் களுக்கு இலவசமாகத் தந்து அச்செடிகளைப் பயிரிடச் செய்து பட்டுப் பூச்சிகளை வளர்க்குமாறு ஊக்குகின் றனர். அப்பூச்சிகளை வளர்க்கும் சிறந்த முறையைப் பற்றி அரசியலார் பல ஆராய்ச்சிகள் புரிந்து மக் களுக்கு உதவிவருகின்றனர். அதனால் பட்டு நெசவுத் தொழில் இப்பகுதியில் நன்கு வளர்ந்துள்ளது.

சர்க்கரைத் தொழில்

மைசூர்ப் பிரதேசத்திலும், பட்டுக்கோட்டைப் பகுதியிலும் கரும்பு மிகுதியாய்ப் பயிரிடப்பட்டுவரு கிறது. மைசூரில் 40,000 ஏக்கர் நிலம் கரும்பு சாகுபடிக்கெனவே ஒதுக்கப்பெற்றுள்ளது. இவ் விடத்தில் பயிராகும் கரும்பைச் சர்க்கரையாகத் தயா ரிக்கும் தொழில் மாண்டியாவில் மிகுதியாக நடை பெறுகிறது. அத்தொழிலுக்கும் மின்சாரம் இன்றி யமையாததாம்.

இரும்புத் தொழிற்சாலை

மற்றும் பத்ராவதியில் இரும்பு, எஃகுத் தொழிற் சாலைகள் பலரும் வியக்குமாறு மின்சாரத்தால் பல வாறு நடைபெற்றுவருகின்றன. சேலம், கோயம் புத்தூர்ப் பகுதிகளிலும் திருச்சி மாவட்டத்திலும் பற்

பல இடங்களில் இரும்பு மறைந்து கிடக்கின்றது. அவற்றைத் தேடிக் கண்டெடுத்தால், இன்னும் பற்பல இரும்பு, எஃகுத் தொழிற்சாலேகள் நிறுவப்படக் கூடும் என்பதை நம்பலாம்.

காகித, சாயத் தொழிற்சாலேகள்

மேட்டூர்ப் பகுதியில் காடுகள் உள்ளன. அக் காடுகளில் மூங்கில் புதர்கள் மிகுதியாய் உள்ளன. அவற்ருல் இப்பகுதியில் காகிதத் தொழிற்சாலேகளும் நிறுவுவதற்கு ஏற்பாடுகள் நடந்துவருகின்றன. அதுவன்றி, நீர்த் தேக்கத்தின் அருகில் இரசாயனத் தொழிற்சாலேகள் தோன்றி மிகவும் வளர்ந்துள்ளன. மற்றும் இங்குச் சாயத் தொழிற்சாலேகளும் நிறுவப் பெற்றுள்ளன. மேலும் பத்ராவதி போன்ற இடங் களில் சிமெண்டும் இக்காலத்தில் அதிகமாகத் தயா ரிக்கப்பட்டு வருகிறது.

கோலார் தங்கச் சுரங்கம்

இவை எல்லாவற்றிற்கும் மேலாகச் சிவசமுத் திரம் நீர்வீழ்ச்சியில் உற்பத்தியாகும் மின்சாரம் சிறப் பாகக் கோலார் தங்கச் சுரங்கங்களிற் பற்பல இயந்தி ரங்களே ஓட்டுவதற்கு இன்றியமையாததாக உள்ளது. இவ்வாறு பொன்னியின் நீர் பொன்னேயாக்குவதற்கே பயன்படும் காரணத்தால் அதற்கு இடப்பெற்றுள்ள பெயர் மிகவும் பொருத்தமானதாக விளங்குகிறது.

மீன் வளர்ப்புத் தொழில்

காவிரியாற்றில் அருவிகள் விழுமிடங்களில் சிறந்த வகை மீனினங்கள் இயற்கையாகவே வாழ்ந்து வருகின்றன. அவை தவிர மற்றைய உயர்ந்த

வகை மீன்களையும் இந்நீரில் வளர்க்கக்கூடும் என அறிஞர்கள் கருதி மேட்டூர்த் தேக்கத்தில் பலவகை மீன்களை விஞ்ஞான முறைப்படி வளர்த்தும், அவற்றைப் புதிய முறைகளில் பிடித்தும் பல ஊர் களுக்கு வாணிகத்துக்காக அனுப்பிவருகின்றனர். இத்துறையில் கணக்கற்ற இலாபம் கிடைப்பதால் இதனைப் பன்மடங்கு சீர்திருத்தி அமைக்க வேண்டு மெனவும் பல முயற்சிகள் நடைபெற்றுவருகின்றன.

பிற நன்மைகள்

இவ்வணைகளும், மேட்டூர் நீர்த்தேக்கமும் ஏற் பட்ட காரணத்தால் பற்பல சாலைகள் சீர்திருத்தி அமைக்கப்பெற்றன. புதிய சாலைகள் பல இடங்களை இணைத்துள்ளன. ஆற்றின் குறுக்கே பல பாலங்கள் அமைந்துள்ளன. இதனால் உழுதொழில் வசதி களும் பிற தொழில் வசதிகளும் ஏற்பட்டுள்ளமையால் மக்கள்தொகையும் பல்கி யுள்ளது. சிறு கிராமங்கள் பல தோன்றியுள்ளன. பல உழவுப் பண்ணைகளும், ஆராய்ச்சிச் சாலைகளும் நிறுவப்பெற்றுள்ளன. நிலப் போக்குவரவு மிகவும் சிறப்புற அமைந்துள்ளது. ஆறுகளிலும் கால்வாய்களிலும் சிறிதளவு படகுப் போக்குவரவும் இக்காலத்தில் பெருகியுள்ளது. இதனால் வாணிகம் வளர்ந்தோங்கியுள்ளது. நாள டைவில் புதிய திட்டங்கள் பல தோன்றி உழவும், தொழிலும், வாணிகமும் பன்மடங்கு வளர்ந்து காவிரி பாயும் நாடு முழுவதும் செல்வத்தில் சிறந்து விளங்கி, நம் நாட்டின் பற்பல இன்னல்களும் இருந்தவிடம் தெரியாமல் மறைந்தொழியும் என்ப தில் ஐயமில்லை.

11. நம் கடமை

இதுவரை கூறியவற்றிலிருந்து காவிரியின் வரலாறு, பெருமை, அவ்யாற்றின் வளம், அது வளர்த்த நாகரிகப் பண்புகள் ஆகியவற்றை ஒருவாறு உணர்ந்தோம். இனி நாம் செய்யவேண்டும் கடமைகள் யாவை எனச் சிந்திப்போம்.

நம் முதற்கடமை

இதுகாறும் பொன்னியாறு பாயும் நம் புனிதத் தமிழ்நாடு ஆங்கிலேயர்க்கு அடிமைப்பட்டுக் கிடந்தது; தனது வளம் முழுவதும் நம் நாட்டுக்குப் பயன்படாமல் மற்றைய நாடுகள் பொருளாதாரத்தில் செழிக்கவும் நாகரிகத்தில் பண்படவும் உதவிவந்தது. இப்பொழுது நாம் உரிமைபெற்ற திருநாட்டின் மக்களாய் வாழ்கிறோம். ஆதலால் நம் பொறுப்பை உணர்ந்து நம் தமிழ் நாட்டை வளங்கொழிக்கும் இன்ப புரியாய், புன்னகைப் பூந்தோட்டமாய் மாற்றி அமைக்கவேண்டுவது நம்முடைய முதற்கடமை யாகும்.

நம் நாட்டின் இயற்கை வளம்

நம் நாடு உலகில் எந்த நாடும் பெற்றிராத இயற்கைவளம் நிறைந்த நாடாகும். மண்ணுக் கடியில் பொன்னும் இரும்பும் மற்றைய உலோகங் களும் மறைந்து கிடக்கின்றன. குளிர் கடலில் குளித்தெடுக்க முத்துக்களும் பவளங்களும் நிறைந் துள்ளன. அகிலும் தேக்கும் வளரும் குன்றங்கள் நம் நாட்டைச் சுற்றி அரண்களென அழகுற அமைந்துள்ளன. நிலமடந்தையின் கழுத்திலிட்ட

ஆரங்களெனக் காவிரி முதலான ஆறுகள் பாய்ந்து வளஞ் செய்கின்றன. எங்கு நோக்கினும் வயல்கள், காடுகள், சோலைகள், தோட்டங்கள், நீர்நிலைகள் ஆகியன நிறைந்து பசுமையும் செழுமையும் கான்று நிலமடந்தைக்குப் போர்த்த பச்சைப் படாமெனத் திகழ்கின்றன. இவ்வாறு கண்ணைக் கவரும் எழிலும் திருவும் வளமும் பெற்று விளங்குகின்ற காரணத்தா லேயே ஒவ்வொரு நாட்டினரும் இந்நாட்டைக் கைப்பற்றி ஆளவேண்டும் என்று முயன்றனர். அதன் பயனாலேயே ஏறக்குறைய முந்நூறு ஆண்டுகள் நாம் பிறர்க்கு அடிமைகளாய் வாழ நேரிட்டது.

இப்போது நம் நாட்டின் நிலை

உலகுக்கெல்லாம் ஒரு காலத்தில் உணவுப் பொருள்களை வழங்கி உயிர் கொடுத்த இந்நாடு, இன்று உணவுக்காகப் பிற நாடுகளின் கையை எதிர் பார்த்து வாழ்கிறது. வந்தவர்களுக்கெல்லாம் வாரி வழங்கி உணவும் உடையும் வாழ வசதியும் செய்து கொடுத்துக் காத்த இந்நாட்டு மக்கள் தென் ஆப்பிரிக்கா, மலேயா, பினாங்கு, சிங்கப்பூர், இலங்கை போன்ற இடங்களில் தேயிலைத் தோட்டங்களிலும் இரப்பர்த் தோட்டங்களிலும் கூலிவேலை செய்பவர் களாய் வாழ்கின்றனர். இந்நாட்டு மக்களிற் பலர் குடிக்கக் கூழின்றிக் கட்டத் துணியின்றிக் குந்தக் குடிலின்றி வானமே கூரையாய் வெறுந்தரையே பாயலாய்க்கொண்டு வகை கெட்ட வறுமை வாழ்வு வாழ்ந்துவருகின்றனர். இந்நிலை சரியா, உரிமை பெற்ற நம்நாட்டிற்கு ஏற்ற நிலையா என்பவற்றை நாம் சிந்திக்கவேண்டும்.

அவல நிலைக்குக் காரணங்கள்

இத்தகைய அவல நிலை நம் நாட்டுக்கு ஏற்படக் காரணம் என்ன? நம் நாட்டில் மக்கள் தொகை பன்மடங்கு பல்கிக்கொண்டிருப்பதற்கேற்ப உணவுப் பொருள்களின் விளைவு மிகுதிப்படாமையே முதற் காரணமாகும். பருவமழை சில ஆண்டுகளாகத் தவறியதும் மற்ருெரு காரணமாம். மற்றும் உழவுத் தொழிலால் போதிய ஊதியமின்மையால் அண்மை யில் நடந்த போரில் உழவர் பலர் கலந்துகொண்ட தையும் காரணமாகக் கூறுவர் சிலர். இவற்றிற் கெல்லாம் மேலாக அந்நியர் நம் வளத்தைக் கொள்ளை கொண்டு நாம் நம் தேவைகளை உணராதவாறு நம்மை மயக்கிவந்ததையே சிறந்த காரணமாகக் கூறவேண்டும். அவர்தம் ஆட்சி அகன்றதும் நாம் வேற்று நாடுகளிலிருந்து உணவுப் பொருள்களை வரவழைக்க இயலாது துன்புறுகிரும்.

நாம் செய்ய வேண்டுவன

இப்பொழுது நாம் முயன்ருல் மிக்க விரைவில் இந்நிலையை மாற்றிக் கொள்ளலாம். இத்தகைய பெரும் பஞ்ச நிலையிலும் ஒவ்வொரு மாவட்டத்திலும் பல இலட்சக் கணக்கான ஏக்கர் நிலங்கள் உழவுத் தொழிலுக்குப் பயன்படாமல் கரம்பு நிலங்களாக உள்ளன என்று அரசாங்கம் புள்ளி விவரம் வெளியிட் டுள்ளது. அதுமட்டும் அன்று வியப்பிற்குரியது. உழவுத் தொழிலுக்கு ஏற்ற வசதி பெற்றுள்ள நிலங் களும் இலட்சம் ஏக்கர் கணக்கில் உழுதொழில் செய்யப்படாமல் வாளா இருக்கின்றனவாம். காவிரி யின் கருணைக் கரங்கள் வளங்களை வாரி வாரிப்

பொழியும் தஞ்சை மாவட்டத்திலும் பல ஏக்கர் நிலங்கள் உழவு செய்யப்படாமல் வறிதே விடப் பட்டுள்ளனவாம்.

நாம் இந்நிலையை உடனே மாற்றியமைக்க வேண்டும். காவிரியின் நீர் கல்லணைக் கால்வாய் மூலம் தஞ்சாவூர் மாவட்டம் முழுவதும் பரவி நீர் வளம் கொழிக்கிறது. நினைத்தாலே திகைப்படையச் செய்யும் இச்சீரிய முறை பெருவெற்றியை அளித் துள்ளது. ஆகவே, மேலும் இம்முறையைப் பின் பற்றிக் காவிரியில் வேறு எவ்விடங்களில் இத்தகைய அமைப்பை ஏற்படுத்தலாம் என்பதைச் சிந்தித்து முயலவேண்டும். தஞ்சாவூர் மாவட்டத்தைப்போலத் திரிசிராப்பள்ளி மாவட்டமும் மிகவும் நிலவள முடையதேயாகும். இத்தகைய கால்வாய் முறையால் திரிசிராப்பள்ளி மாவட்டத்தையும் நீர்வளமுடைய தாக்க முடிந்தால் பெரும்பயன் விளையலாமன்றோ? காவிரியின் குறுக்கே கட்டப்பெற்ற மிகப் பெரிய நீர்த் தேக்கமாகிய மேட்டூர் அணையால் சோழநாடுமட்டுமே பயன்பெற முடிந்தது. அவ்வணையின் அமைப்பால் எதிர்பார்த்த அளவு பயன் இன்னும் முழுவதும் ஏற்படவில்லை. இன்னும் மேட்டூர் நீர்த்தேக்கத்தால் தஞ்சாவூரில் இலட்சக்கணக்கான ஏக்கர் நிலங்களை உழவுத்தொழிலுக்கு ஏற்ற நிலமாக்க முடியும் என்று அறிஞர்கள் கருதுகின்றனர். ஆகவே இயற்கை நமக்கு அளித்துள்ள இந்தக் காவிரி வளத்தை நாம் முற்றிலும் பயன்படுத்திக்கொள்வதன்றோ அறி வுடைமை! ஆகவே, நம் நாட்டு அறிவு நூற்புலவர் களும், தொழிற்கலை நிபுணர்களும் இத்தகைய பய னுடைய திட்டங்களில் கருத்தைச் செலுத்து வார்களாக.

அரசாங்கத்தார் கடமைகள்

நம் சென்னை அரசாங்கத்தார் உழவுத் தொழிலுக்குரிய நீர் வசதிகளைப் பெருக்குவதில் இப்போது கவனம் செலுத்தி வருவது வரவேற்கத் தக்கதாம். பவானி, மணிமுத்தாறு போன்ற இடங்களில் அணைகள் அமைக்கத் திட்டங்களிடப்பட்டு வருகின்றன. மற்றும் பல இடங்களில் இத்தகைய வசதிகள் செய்ய முயற்சிகள் நடைபெற்றுவருகின்றன. மேலும் மேட்டூர் அணையால் கிடைத்த மிகப் பெரிய நன்மையாகிய மின்சார வசதியைக் கொண்டு கோயம்புத்தூர் மாவட்டத்தில் ஏராளமான தொழிற்சாலைகள் ஏற்பட்டுள்ளன. அவைகளிற் பெரும்பாலன நூல் ஆலைகளேயாம். அவற்றைத் தவிர எண்ணற்ற நெசவாலைகளையும் ஏற்படுத்தி நம் நாட்டுத் துணிப் பஞ்சத்தைப் போக்க முயலவேண்டும்; மற்றும் அம்மின்சார வசதியை நாட்டின் பல பாகங்கட்கும் கொண்டு சென்று பற்பல தொழில்களையும் பெருக்கப் பாடுபட வேண்டும். நம் நாட்டில் சேலம், கோயம்புத்தூர் போன்ற மாவட்டங்களில் இரும்பு, மாங்கனிசைட் ஏராளமாகக் கிடைக்கலாம் என்று அறிஞர்கள் கண்டறிந்து கூறுகின்றனர். அவற்றை எடுக்கச் சுரங்கங்களை அமைக்க இம்மின்சாரம் பயன்படுத்தப் படலாம். அவ்வாறு செய்வதன் மூலம் நம் நாட்டின் பொருளாதாரம் பன்மடங்கு பெருக வழி உண்டாகும். இங்ஙனம் காவிரியையும், வையை, தாமிரவருணி போன்ற பற்பல ஆறுகளையும் தக்க வகையில் பயன் படுத்தினல், தற்போதுள்ள உணவு, உடை, வாழ்க்கைக்குத் தேவையான பிற பொருள்கள் ஆகிய எல்லாவித வளங்களையும் பெருக்கிக் கொள்ளலாமன்றோ?

நம் நாட்டுச் செல்வர்களின் பொறுப்புக்கள்

இவ்வளவையும் அரசாங்கமே செய்துமுடிக்க வேண்டும் என்பது மிகவும் அரிய செயலாகும். நம் நாட்டில் ஏராளமான பொருள் படைத்த பெருஞ் செல்வர் பலர் வாழ்கின்றனர். அவர்கள் யாவரும் நம் நாட்டின் உயர்வு தங்கள் உயர்வு என்று கருதி, இத் தகைய தொழில்களில் தங்கள் முதற் பொருள்களை இட்டுத் தொழில் வளம் பெருக்க முன்வர வேண்டும். அவர்கள் செய்யும் தொழிலுக்கு அரசாங்கம் தக்க பாதுகாப்பளிக்க முன்வரவேண்டும். இங்ஙனம் அரசாங்கமும் மக்களும் சேர்ந்து செய்தால்தான் இத் திட்டங்கள் உருவாகும். அன்றே நம் நாடு செழிக்கும். நாம் வளமாக வாழ்வோம். ஆகவே, அத் துறைகளில் பாடுபட முன்வருவோமாக. நமக்கு இத்தகைய வளங்களைத் தந்து பொருளாதாரத்துக் குதவும்—மேலும் பல துறைகளில் உதவக் காத்திருக்கும்—அன்னை காவிரியின் பேரருளைப் போற்றிப் புகழ்வோமாக !

காவிரி போற்றுதும் காவிரி போற்றுதும்
பூவிரி புதுநீர் பொன்வளம் கொழிக்க
ஓவா துலகளித்த லான்.

பயிற்சிக்கு உரிய கட்டுரைகள்

கீழ்கண்ட தலைப்புகளில் ஒவ்வொன்றைப் பற்றியும் ஒன்றரைப் பக்கத்துக்கு மிகாமல் கட்டுரைகள் எழுதிப் பழகுக :—

1. ஆறுகளும் நாகரிகமும்
2. காவிரியின் பெருமைகளை இலக்கியங்கள் போற்றும் வகை
3. காவிரியும் சோணாடும்
4. காவிரியைப் பற்றிய புராண வரலாறுகள்
5. குடகிலும் மைசூரிலும் காவிரி
6. கொங்கு நாட்டில் காவிரி
7. சோழ நாட்டில் காவிரி
8. சிவசமுத்திரம்
9. காவிரிக்கரை நகரங்கள்
10. காவிரிக்கரை நாகரிகம்
11. கரிகாலன் காவிரிக்குச் செய்த தொண்
12. காவிரியின் அணைகள்
13. மேட்டூர் நீர்த்தேக்கம்
14. கிருஷ்ணராஜ சாகரம்
15. காவிரியும் உழவுத்தொழிலும்
16. காவிரியும் மின்சார உற்பத்தியும்
17. பொன்னியும் பொருளாதாரமும்
18. காவிரியும் மக்கள் கடமையும்

CAUVERI

BY

Vidwan M. S. VENKATACHARIAR
Vidwan G. VILVAPATHY
T. R. SRINIVASACHARIAR, B.A., B.T. (Tamil)
HINDU THEOLOGICAL HIGH SCHOOL, MADRAS.

★

Price: Re. 1/-